Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

SATURDAY, APRIL 9, 2022

சனிக்கிழமை ஏப்ரல் 09, 2022 | ஒளி: 07 கதிர்: 278 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# பதவி நீக்க பிரேரணை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையையும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக பதவி நீக்கப் பிரேரணையையும் கொண்டுவருவது தொடர்பில் பாராளுமன்றத்தில் பலரும் கருத்துரைத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலர், நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரவேண்டும் என வலியுறுத்தினர். அத்துடன், நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமும் இட்டனர்.

இந்நிலையில், நேற்றைய விவாதத்தில் உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், பதவி நீக்க பிரேரணையை கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, 113 பெரும்பான்மையை காண்பித்தால், அரசாங்கத்தை கையளித்துவிட்டு செல்வதற்குத் தாங்கள் தயார் என்றும் ஜனாதிபதியால் நீட்டப்பட்ட ஆதரவு கரத்தை பிடித்துக்கொள்வதற்கு எதிரணியினருக்கு விருப்பம் இல்லை என்றும் அரசாங்கத் தரப்பினர் தெரிவித்தனர்.



## சபையில் ஒலித்தவை

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம், பாராளுமன்றத்தில் நேற்று (08) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

- எதிரணியின் கோரிக்கையை ஏற்கோம்– தினேஷ்
- ஏநரம் பார்த்து வந்தாரா, அச்சத்தில் சென்றனரா
- வரிசை நிலையை மாற்ற வேண்டும்– டக்ளஸ்
- செவிசாய்க்கவில்லை தீவிரப்படுத்துங்கள்– ஹரின்
- பாணுக்கு குரைக்கும் நாய்; மீனுக்கு குரைப்பதில்லை– அநுருத்த
- ஏப்ரல் வரை நான் பதவி வகிப்பேன்– ரஞ்சித்
- சபாநாயகருக்கு கூடுதல் பொறுப்பு உள்ளது– விஜயதாஸ

"தனியார் துறைகள்

# ஜூனில் முடங்கலாம்"

## ரணில் எச்சரிக்கை: பஞ்சாங்கத்தில் புண்ணியகாலம் இல்லை என்கிறார்

நெருக்கடி நிலைமைகள் மே மாதத்தின் பின்னர் தீவிரமடைந்துடு பொருட்களை வாங்குவதற்கு பணம் இல்லாது போகும் நிலை உருவாகலாம் எனவும், இதனால் ஜூன் மாதமளவில் தனியார் துறைகள் மூடப்படலாம் எனவும் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

சர்வகட்சி கூட்டத்தில் நானும், சுமந்திரனும் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே இன்று இந்த விவாதம் நடைபெறுகின்றது. பந்துல குணவர்தன கூறுவதை போன்று, நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிதி முகாமைத்துவ வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது என்றும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம், பாராளுமன்றத்தில் நேற்று (08) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தொடர்ச்சி P2



"9 யோசனைகளை அமல்படுத்தினால்

# 12 மாதங்களில் தீர்வு

நாட்டின் தற்போதை நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஒன்பது யோசனைகளை முன்வைத்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அந்த யோசனைகளை அச்சொட்டாக நிறைவேற்றினால். ஆறு அல்லது 12 மாதங்களில் நிதி நெருக்கடியை முகாமைத்துவம் செய்து, நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியும் என்றார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் மறுசீரமைக்கப்பட்ட வரவு-செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

தொடர்ச்சி P2



## முதலமைச்சர் ஸ்டாலினுக்கு இ.தொ.கா நன்றி நவின்றது

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை வழங்க முன்வந்துள்ள தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நன்றி தெரிவித்துக்கொள்கின்றது.

தொடர்ச்சி P2

## சைக்கிளுடன் புதைக்கப்பட்ட யாழ். பெண் சடலமாக மீட்பு

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், மணியந்தோட்டம், உதயபுரம் பகுதியை சேர்ந்த பிரதீபன் ஜெசிந்தா (வயது 42) என்ற பெண், யாழ்ப்பாணம், அரியாலை பகுதியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட அந்தப் பெண், தான் உயிருடன் இருந்த போது, அப்பகுதியில் உள்ளவர்கள் சிலருக்கு பணம் கொடுத்துள்ளார். இந்நிலையில், கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் அப்பெண் காணாமல் போயிருந்தார்.

காணாமல் போனமை தொடர்பில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

தொடர்ச்சி P2





## கடமையேற்பு...

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்றுமுன்தினம் (07) நியமிக்கப்பட்ட கலாநிதி நந்தலால் வீரசிங்க, மத்திய வங்கிக்கு நேற்று (08) சென்று தனது கடமைகளை ஏற்றுக்கொண்டார்.

## கல்லடி பதாகையால் பரபரப்பு

வா.கிருஸ்ணா

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, பதவி விலகியதன் பின்னர் முன்னாள் நீதியமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நியமிக்கப்பட்டார். அவர், தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்தார்.

தொடர்ச்சி P2




## "திமிர்பிடித்த கோட்டாபய ராஜபக்ஷ"

"திமிர்பிடித்த கோட்டாபய ராஜபக்ஷ" எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கான பதவி நீக்க பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டு வருமாறு முன்மொழிந்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம், பாராளுமன்றத்தில் நேற்று (08) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## தகாத வார்த்தை பேசிய இரு எம்.பிக்கள் நீக்கம்

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை உள்ளிட்டவை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (08) விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்ட எம்.பிக்கள் இருவர், சபையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டனர்.

ஆளும் கட்சியின் எம்.பியான ஜானக திஸ்ஸகுட்டியாராச்சி, ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான சமிந்த விஜேசிறி ஆகிய இருவரே நீக்கப்பட்டனர்.

இரு எம்.பிக்களின் செயற்பாடுகளை அவதானித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி, சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

தொடர்ச்சி P2



## "சபைக்கு இனிமேல் வரமாட்டேன்"

"பாராளுமன்றத்தில் இனிமேல் உரையாற்றமாட்டேன், பாராளுமன்றத்துக்கு இனி வரவும் மாட்டேன்" என்று பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசனாயக்க, சபையில் நேற்று (08) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# ஜூனில் முடங்கலாம்

இப்போது புத்தாண்டு கால பஞ்சாங்கத்தில் புண்ணிய காலமும் இல்லை; உணவு பரிமாறுவதற்கான நேரமும் இல்லை. மேசையில் வைக்கும் பலாகாரத்திற்கு கூட 75 ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது. எரிவாயு, எரிபொருள் பற்றாக்குறை, மின்வெட்டு உள்ளன. இதுதான் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக உள்ளது. புத்தாண்டு காலத்தில் மூன்று நேரமும் உண்ணமுடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது. இங்கே ஏற்படும் அழுத்தம் காரணமாகவே ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. ஜனாதிபதியை வெளியேறுமாறு கூறியே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ஜனாதிபதி செல்லவில்லை என்று கூறியுள்ளார்.

இந்த நேரத்தில், அவர் மக்களுக்கு என்ன செய்யப் போகின்றேன் என்று கூற வேண்டும். அவர் கூறிய பின்னரும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தால் கட்சிகளைக் கூட்டி, கருத்துகளைக் கேட்கலாம். நீங்கள் உங்களின் நிலைப்பாட்டை மக்களிடம் கூறுங்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டால் பிரச்சினை இல்லை.

இதேவேளை அமைச்சரவை அமைக்கப்பட்ட பின்னர், இந்தச் சபையில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். இந்தச் சபையில் நம்பிக்கையை கோருங்கள். நம்பிக்கை இருந்தால் தொடர்ந்து போகலாம். அடுத்த வாரத்தில் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்நிலையில் நிலைமைகளை கட்டுப்படுத்த இராணுவத்தினரை ஈடுபடுத்த வேண்டாம்.

**❝ நாட்டில் இவ்வாறான நிலைமை உருவாக காரணம் என்ன என்று தேடிப்பார்க்க வேண்டும். அதனுடன் தொடர்புடைய நபர் யார் என்று கண்டறிந்து அவருக்கு தண்டனை வழங்க வேண்டும். இராணுவம் அரசியலமைப்பை மீறினால், நாட்டின் பொருளாதரத்திற்கே தாக்கத்தை ஏற்படுத்தும்.**

பொலிஸாருக்கே சிவில் அதிகாரம் உள்ளது. இதனால் இராணுவத்தினரை ஈடுபடுத்த முடியாது. எனக்கு தெரிந்த இராணுவம் அரசியலமைப்பை மீறிச் செல்லாது. இராணுவம் அரசியலமைப்பை மீறினால், நாட்டின் பொருளாதரத்திற்கே தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதேவேளை நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்திடமே உள்ளது. இதன்படி இந்த சபைக்கு அந்த அதிகாரத்தை எடுக்க வேண்டும். இங்கே நிதி நிர்வாகம் தொடர்பான சட்டத்தை கொண்டு வர வேண்டும்.

இந்நிலையில் நாட்டில் இவ்வாறான நிலைமை உருவாக காரணம் என்ன என்று தேடிப்பார்க்க வேண்டும். அதனுடன் தொடர்புடைய நபர் யார் என்று கண்டறிந்து அவருக்கு தண்டனை வழங்க பாராளுமன்றத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.



# 12 மாதங்களில் தீர்வு

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம், பாராளுமன்றத்தில் நேற்று (08) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ளள அறிக்கை மீதான விவாதம் இடம்பெறும் நிலையில், நிதியமைச்சர் ஒருவர் பதவி வகிக்காமல் இருப்பது கவலைக்குரியது.

நிதி நெருக்கடியினை எதிர்க்கொள்ள கடன் வழங்கல் நிறுவனங்களுடன் இருதரப்பு மற்றும் பல தரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுப்பட வேண்டும்.கடன் செலுத்தல், மீள்பரிசீலனை செய்யப்பட்டு கடன் செலுத்தலுக்கு காலஅவகாசம் பெற்றுக்கொள்ள வேண்டும். வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு கையிருப்பினை அத்தியாசிய சேவைக்கு பயன்படுத்தினால் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். அரசாங்கம் துரிதமாக பூகோள சட்டம் மற்றும் நிதி தொடர்பிலான ஆலோசனை குழுவை ஸ்தாபிக்க வேண்டும். துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு மதிப்பளிக்காவிடின் நாடு வங்குரோத்து நிலைமையடைவதை தடுக்க முடியாது.

இரண்டாவதாக, மத்திய வங்கி சுயாதீனமாக செயற்படும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும். அரசியல் தலையீடுகளால் மத்திய வங்கி தனது சுயாதீனத்தன்மையை இழந்துள்ளது. நாணய சபைக்கு திறமையானவர்கள் அரசியல் தலையீடின்றி நியமிக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக, கடன் செலுத்தல் காலஅவகாசம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட ஆசிய நாடுகளில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு சர்வதேச மட்டத்தில் ஸ்திரமான நம்பிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும்.

**❝ தற்போதைய அறிக்கைக்கு அமைய இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் தொழில்நுட்ப உதவியை மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியும்.கடன் முகாமைத்துவம், கடன் மீள்செலுத்தல் மறுசீரமைக்கப்பட்டால் மாத்திரமே நிதியுதவி மற்றும் இதர ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும்**

நான்காவதாக, ஒரு விடயம் குறித்து அதிக அவதானம் செலுத்த வேண்டும். இலங்கை கடன் நிலைபேறான தன்மையை இழந்துள்ளது என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளமை பாரதூரமானது. இலங்கை 16 முறை சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளது. தற்போதைய அறிக்கைக்கு அமைய இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் தொழில்நுட்ப உதவியை மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியும். கடன் முகாமைத்துவம், கடன் மீள்செலுத்தல் மறுசீரமைக்கப்பட்டால் மாத்திரமே நிதியுதவி மற்றும் இதர ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

ஐந்தாவதாக, இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது அவசியமாகும். ஜப்பான், இந்தியா உட்பட வலய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு சாதக மற்றும் பாதக காரணிகளை ஆராய்ந்து, பொதுக் கொள்கை ஒன்றை துரிதமாக செயற்படுத்த வேண்டும்.சிறந்த திட்டங்களை செயற்படுத்தினால் 6 தொடக்கம் 12 மாத வரையான காலப்பகுதியில் நிதி நெருக்கடியினை சீர் செய்ய முடியும்.

ஆறாவதாக, குறுகிய கால திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.நாட்டின் உணவு வீக்கம் 35 சதவீதத்தாலும்,மொத்த பொருளாதார வீக்கம் 15 சதவீதத்தாலும் உயர்வடைந்துள்ளது.ஆகவே மறுசீரமைக்கப்பட்ட வரவு-செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.வறுமைக் கோட்டில் வாழும் மக்களுக்கு நிவாரணம் வழங்க செல்வந்த தரப்பினரிடமிருந்து ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ள முறையான பொறிமுறை செயற்படுத்தப்பட வேண்டும்.

ஏழாவதாக, மேற்குறிப்பிடப்பட்ட யோசனைகளை செயற்படுத்த திட்டங்கள் படித்த, அரசியல் நோக்கமற்ற தரப்பினரால் செயற்படுத்தும் பொதுமைப்படுத்தப்பட்ட திட்டத்தை அரசாங்கம் வகுக்க வேண்டும்.

எட்டாவது, நாட்டின் உணவு பாதுகாப்பு அச்சுறுத்தல் தன்மையில் உள்ளது என்பதை மறுக்க முடியாது. உணவு தட்டுப்பாடு அச்சுறுத்தலை தவிர்ப்பதற்காக அரசாங்கம் சர்வதேச உணவு தாபனம்,யுனிசெப் உட்பட ஐக்கிய நாடுகள் உணவு பாதுகாப்பு அமைப்புகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒன்பதாவதாக, பொருளாதார முன்னேற்றத்திற்கு பாரிய பங்களிப்பு வழங்கும் சிறிய மற்றும் நடுத்தர தரப்பினருக்கும்,தொழிற்றுறை முயற்சியாளர்களுக்கும் நிவாரணம் வழங்கும் திட்டங்கள் நடைமுறைக்கு பொருந்தும் வகையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்றார்.



# முதலமைச்சர் ஸ்டாலினுக்கு இ.தொ.கா நன்றி நவின்றது

இதுதொடர்பில், இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசிகள் அதிகரித்துள்ளன. இதனால், பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு, மலையக மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகளை வழங்குவது தொடர்பில், இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டொக்டர் சுப்ரமணியம் ஜெய்சங்கரை தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ள தமிழக முதலமைச்சர், இது தொடர்பாகக் கலந்துரையாடி, உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

**❝ அரிசி, பருப்பு, மருந்துகளை கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகம் வாயிலாக அனுப்புவதற்குத் தயாராக உள்ளதாகவும், இத்தகைய பொருட்களை தமிழர்களுக்கு, வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது**

இந்தச் சூழ்நிலையில் இலங்கையில் வசிக்கும் குறிப்பாக மலையகம், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் வாழும் தமிழர்களின் நலன் கருதி, தமிழ்நாடு அரசாங்கத்தால் அத்தியாவசிப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகம் வாயிலாக அனுப்புவதற்குத் தயாராக உள்ளதாகவும், மனிதாபிமான நோக்கில் அனுப்பப்படும் இத்தகைய பொருட்களை தமிழர்களுக்கு, வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் தமிழக முதலமைச்சர் செய்துள்ள உதவிக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இத்தருணத்தில் செய்யப்படும் உதவி எம்மக்களுக்கு பாரிய பக்கபலமாக இருக்கும் என்பது உறுதி என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தகாதவார்த்தை பேசிய இரு எம்.பிக்கள் நீக்கம்

அதனையடுத்து சபை நடவடிக்கையை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அவ்விரு எம்.பிகளையும் வெறியேற்றுமாறு படைக்கல சேவிதர்களுக்கு பணித்தார்.

எனினும், தன்னிலை விளக்கமொன்றை வழங்குவதற்கு சமிந்த விஜேசிறி முயற்சித்தார். அதற்கு இடமளிக்காத சபாநாயகர், சபையை மீண்டும் ஒத்திவைத்துவிட்டு எழுந்து சென்றார். அதன்பின்னர், அவ்விரு எம்.பிகளும் வெளியேறிவிட்டனர்.

அதன்பின்னர், எவ்விதமான குறுக்கீடுகளும் இன்றி சபையை வழிநடத்துமாறு உறுப்பினர்களிடம் சபாநாயகர் கேட்டுக்கொண்டார். நேற்றைய விவாதத்தின் நிறைவில், சபை நடவடிக்கைகள் ஏப்ரல் 19ஆம் திகதி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.





# சைக்கிளுடன் புதைக்கப்பட்ட யாழ். பெண் சடலமாக மீட்பு

இந்நிலையில், வியாழக்கிழமை (07) கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அரியாலை மணியந்தோட்டம் 11ஆம் குறுக்கு தெருவை சேர்ந்த வீடொன்றினை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

அந்த வீட்டின் வளவினுள் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்ட இடத்தை அகழ்ந்து சோதனை நடத்த நீதிமன்ற அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டனர்.

இந்நிலையில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா, சட்ட வைத்திய அதிகாரி எஸ். பிரணவன் முன்னிலையில் அகழ்வு பணிகளை முன்னெடுத்த போது, சுமார் 6 அடி ஆழமுள்ள கிடங்கில் இருந்து கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலமும் மற்றுமொரு கிடங்கில் இருந்து அப்பெண்ணின் மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர்.

**❝ கிடங்கில் இருந்து கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலமும் மற்றுமொரு கிடங்கில் இருந்து அப்பெண்ணின் மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர். வீட்டில் குடியிருந்த கணவன், மனைவி மற்றும் அவர்களுக்கு உதவிய இளைஞன் ஆகிய மூவர கைது செய்யப்பட்டுள்ளனர்**

அத்துடன் வீட்டில் குடியிருந்த கணவன், மனைவி மற்றும் அவர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் ஆகிய மூவரை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்லடி பதாகையால் பரபரப்பு

அலி சப்ரியின் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வில்லை என்றும், அப்பதவியில் அலி சப்ரியே இருக்கிறார் என்றும், ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர, பாராளுமன்றத்தில் நேற்று (08) தெரிவித்தார். இந்நிலையில், அடுத்த நிதியமைச்சராக நியமிக்கப்படவிருப்பதாகக் கூறி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுக்கு வாழ்த்துத் தெரிவித்து, மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகே பதாகை கட்டப்பட்டுள்ளது.

இந்த பதாகைக்கு, இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி உரிமை கோரப்பட்டுள்ளது. எனினும், இந்தப் பதாகையின் உண்மைத்தன்மை தொடர்பில் விளக்கம் கேட்பதற்கு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு பலமுறை முயற்சித்த போதிலும் அம்முயற்சி பயனளிக்கவில்லை.

**❝ பதாகையின் உண்மைத்தன்மை தொடர்பில், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு பலமுறை முயற்சித்த போதிலும் அம்முயற்சி பயனளிக்கவில்லை**

# “சபைக்கு இனிமேல் வரமாட்டேன்”

மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்து மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு வந்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க ஒரேயோர் ஆசனத்தை பெற்று பாராளுமன்றுக்கு வந்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மீண்டும் வந்துள்ளார்.

இவர்கள் அனைவரும் நாட்டை கட்டியெழுப்பவே வந்துள்ளனர். எனக்கு ஆங்கிலம் தெரியாது; சர்வதேச மொழி தெரியாது. என்னால் ஒன்றுமே செய்யமுடியாது என நினைத்தால், மீண்டும் ஊவா மாகாண முதலமைச்சர் பதவிக்குச் செல்லமுடியும். ஆகையால், ஸ்திர நிலைமையொன்று ஏற்படும் வரையிலும் நான் சபைக்கு வரமாட்டேன் என்றார்.

**❝ எனக்கு ஆங்கிலம் தெரியாது; சர்வதேச மொழி தெரியாது. என்னால் ஒன்றுமே செய்யமுடியாது என நினைத்தால், மீண்டும் ஊவா மாகாண முதலமைச்சர் பதவிக்குச் செல்லமுடியும். ஆகையால், ஸ்திர நிலைமையொன்று ஏற்படும் வரையிலும் நான் சபைக்கு வரமாட்டேன்**

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம், பாராளுமன்றத்தில் நேற்று (08) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.



# எதிரணியின் கோரிக்கையை நிராகரித்தார் தினேஸ்

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பாக ஆராய்வதற்காக திங்கட்கிழமையும் (11) பாராளுமன்றத்தை கூட்டுமாறு எதிர்க்கட்சியினர் முன்வைத்த யோசனையை சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன நிராகரித்தார்.

விவாதத்தில் உரையாற்றிய முன்னாள் பிரதமரும் ஐ.தே .க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு விரைவான தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்றும் முடியுமானால் எதிர்வரும் திங்கட்கிழமை பாராளுமன்றத்தைக் கூட்டி அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் சபையில் கேட்டுக்கொண்டார்.

திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை கூடியேனும் ஒரு தீர்மானத்தை எட்டவேண்டும். நிலைமை மோசமாகிக்கொண்டிருக்கின்றது என்றும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம். பி இரான் விக்ரமரத்ன,முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தைக் கூட்டும் யோசனை தொடர்பில் சபை முதல்வர் பதில் வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன பதிலளிக்கையில், அவ்வாறான தேவை இருந்தால் கட்சித் தலைவர்கள் பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் கூடி அது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும். எனினும், பாராளுமன்றத்தை திங்கட்கிழமையும் கூட்ட வேண்டிய அவசியம் கிடையாது. கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய பாராளுமன்றம் ஏப்ரல் 19ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மீள அதில் மாற்றம் ஏற்படுத்த முடியாது என்றார்.



## “செவிசாய்க்கவே இல்லை நீங்கள் தீவிரப்படுத்துங்கள்”



மக்களின் போராட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கின்றது. அந்த மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க பாராளுமன்றம் தயார் இல்லை. எனவே, தமது போராட்டங்களை இன்னும் தீவிரப்படுத்தி முன்னெடுக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான ஹரின் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பாஅபேவர்தன தலைமையில் கூடியது. கூற்றொன்றை முன்வைத்து கருத்துரைத்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீதியில் இறங்கி போராடும் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவோ நாட்டின் நெருக்கடியை தீர்க்கவோ பாராளுமன்றம் தயாராக இல்லை .அத்துடன் ,ஜனாதிபதி வீட்டுக்கு செல்லப் போவதும் இல்லை. அரசாங்கம் பதவி விலகப்போவதும் இல்லை. ஆகையால், மேலே குறிப்பிட்ட மூன்று விடயங்களும் நிறைவேற்றப்படும் வரையிலும் உங்கள் போராட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கவும் எனக் கேட்டுக்கொண்டார்.

## பாணுக்கு குரைக்கும் நாய்: மீனுக்கு ஏன் குரைப்பதில்லை



இந்த பாராளுமன்றத்தின் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர், எரிபொருள், காஸ், டீசல், மண்ணெண்ணெய் வரிசைகளுக்குச் சென்று நாங்கள் எதிரணியினர் எனக் கூறுங்கள் பார்ப்போம் என எதிர்க்கட்சியினருக்கு சவால் விடுத்த ஆளும் கட்சியின் எம்.பியான இந்திக அனுருத்த, உள்ளே செய்யமுடியாததை வெளியே சென்று செய்கின்றனர் என்றார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை காண்பிக்க வேண்டுமாயின், அனுரகுமார திஸாநாயக்கவுக்கு 110 பேர் தேவை. சஜித்துக்கு 70 பேர் தேவை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு 112 பேர் தேவை. அதனால்தான், பாராளுமன்றத்துக்குள் செய்யாமல், வெளியே கொண்டு சென்றுவிட்டனர் என்றார்.

பாண் விற்பவர்களையும் நாய்க்குத் தெரியும், மீன் விற்பவர்களையும் நாய்க்குத் தெரியும் என்று தெரிவித்த அவர், பாண் விற்பனை செய்பவரை கண்டு குரைக்கும் நாய், மீன் விற்பவரைக் கண்டு ஏன்? குரைப்பதில்லை. ஆகையால்தான், இந்த பாராளுமன்றம் நிறைவடைந்ததன் பின்னர் வரிசைகளுக்குச் சென்று, நாங்கள் எதிரணியினர் எனக் கூறுங்கள் பார்ப்போம் என சவால் விட்டார்.

## “ஏப்ரல் வரை மட்டுமே பதவி வகிப்பேன்”

இரு நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த ஏப்ரல் மாதம் வரை மட்டுமே பதவி வகிக்க தீர்மானித்துள்ளேன் என பிரதி சபாநாயகர், ரஞ்சித் சியம்பலா பிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்றுக்காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சுயாதீனமாக செயற்படுவதாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாராளுமன்றத்தில், ஏப்ரல் 5 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

அதனையடுத்து தாம் வகித்த பதவிகளில் இருந்து சுதந்திரக் கட்சியின் இராஜினாமா செய்து கொண்டனர். பிரதி சபாநாயகரான ரஞ்சித் சியம்பலாபிட்டியவும் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தார்.

விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய அவர்,

பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக கடந்த ஏப்ரல் 5ஆம் திகதி எனது இராஜிநாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தேன்.

அப்போது அதனை ஏற்றுக்கொண்ட அவர் அன்றையதினம் பிற்பகல் தன்னை சந்தித்த எமது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரிடம் மக்களின் இறைமையயும் பாராளுமன்றத்தின் ஜனநாயகத்தையும் பாதுகாக்கவேண்டி இருப்பதால் எனது இராஜினாமாவை நிராகரிப்பதாக கூறிவிட்டார்.

எனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் ஏப்ரல் 5ஆம் திகதி கையளித்ததில் இருந்து பிரதி சபாநாயகர் பதவியின் சிறப்புரிமைகள் எதனையும் பயன்படுத்தப் போவதில்லை,அப்படி நான் பயன்படுத்தினால் அதற்குரிய அறவீடுகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன், பிரதி சபாநாயகர் பதவியில் ஏப்ரல் இறுதி வரை மட்டுமே இருப் பேன் என்றார்.



## வரிசை நிலைமையை உடனடியாக மாற்ற வேண்டும்



அத்தியாவசியப் பொருட்களுக்காக மக்கள் வரிசைகளில் நிற்கின்ற நிலைமைகளை உடனடியாக மாற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, உணர்ச்சிகளாலோ அல்லது சுயலாப அரசியல் நலன் சார்ந்த சிந்தனைகள் மூலமோ இந்த நிலைமையை மாற்ற முடியாது எனவும் அறிவு ரீதியாக அனைவரும் சிந்தித்துச் செயலாற்றுவதன் மூலமே மாற்றியமைக்க முடியும் என்றார்.

எமது நிலை உணர்ந்து நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்கி வருகின்ற இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் எமது மக்கள் சார்பாக தனது நன்றியைத் தெரிவித்துகொண்டார்.

‘எமது நாடு, பொருளாதார ரீதியில் ஓர் இக்கட்டான நிலையை எட்டியிருக்கின்ற வேளையில், அதற்கெதிரான மக்களது கோப வெளிப்பாடுகள் ஆர்ப்பாட்டங்களாக ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இத்தகைய ஆர்ப்பாட்ட நிகழ்வுகள் சிலரின் திட்டமிடப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களாக மாறி, வன்முறைகளாக உருவெடுத்த சம்பவங்களையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

எமது பகுதிகளைப் பொறுத்த வரையில், பெரும்பான்மையாக தென் இலங்கையிலிருந்து சென்றவர்களினாலேயே இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதாக ஊடகங்களின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

பொருளாதார நெருக்கடிகளில் இருந்து எமது தாய் மண்ணை மீட்டெடுப்போம். சகல மக்ககளும் சரி நிகர் சமன் என்ற நீதியை உருவாக்குவோம்' என்று தெரிவித்துள்ளார்.

அதே போன்று இப் பிரச்சினைகள் குறித்து கருத்துக்களை முன்வைக்கின்ற எதிர்தரப்பு அரசியல்வாதிகளும் தங்களது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பட்டு, முடிந்தவரை ஆளுக்காள் திட்டித் தீர்ப்பதில் அக்கறை காட்டுகின்றனரே அன்றி, இப்பிரச்சினைகளுக்கான நடைமுறைச் சாத்தியமான தீர்வினை முன்வைப்பதாக இல்லை.

குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதற்கே அனைவரும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

## சபாநாயகருக்கு இந்நேரம் கூடுதல் பொறுப்பு உள்ளது

நெருக்கடி நிலைமை தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரத்தை பாராளுமன்றம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், இதில் சபாநயகர் அதிக பொறுப்புகளை வகிக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரச்சனைகளை தீர்ப்பது தொடர்பில் சபையில் ரணில் விக்கிரமசிங்க பல்வேறு யோசனைகளை முன்வைத்தார். நாங்கள் இந்த பாராளுமன்றத்தில் விவாதங்களில் ஈடுபடுகையில் வெளியே பற்றி எரியும் நிலைமையே காணப்படுகின்றது.

ஜனநாயக நாடுகளில் இதுபோன்ற நிலைமைகளின் பொது அதன் பொறுப்புகளை பாராளுமன்றமே ஏற்கின்றன. இதில் அதிக பொறுப்புகளை சபாநாயகர் ஏற்கின்றார். ஆனால் இந்த பாராளுமன்றத்தில் அது வழமைபோன்று இங்கு விவாதங்களில் மாத்திரம் ஈடுபடுவது மக்களின் கோபங்களுக்கே உள்ளாக அது இது அதிகரித்து க்கொண்டே போகின்றது. அதனை குறைக்க வேண்டும் என்றார்.

**“ தீர்ப்பது தொடர்பில் சபையில் ரணில் விக்கிரமசிங்க பல்வேறு யோசனைகளை முன்வைத்தார். நாங்கள் இந்த பாராளுமன்றத்தில் விவாதங்களில் ஈடுபடுகையில் வெளியே பற்றி எரியும் நிலைமையே காணப்படுகின்றது.**



## நேரம் பார்த்து வந்தாரா அச்சத்தில் சென்றனரா

சபைக்குள் எதிர்க்கட்சியினர் நேற்றுமுன்தினம் (07) இல்லாத நேரம் பார்த்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சபைக்கு வந்தாரா அல்லது ஜனாதிபதி வருவதனை அறிந்து அச்சத்தில் எதிர்க்கட்சியினர் சபைக்கு வராது விட்டனரா என்ற சர்ச்சை ஏற்பட்டது

பாராளுமன்றம் நேற்று (08) காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.இதனையடுத்து எதிர்க்கட்சியினர் பலர் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பிய போதே இந்த சர்ச்சை ஏற்பட்டது.

முன்னதாக எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான நளின் பண்டார நேற்று (வியாழக்கிழமை) நாங்கள் சபையில் இல்லாத நேரம் பார்த்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஒளிந்து மறைந்து இந்த சபைக்கு வந்து விட்டு ஓடிவிட்டார். முடிந்தால் நாங்கள் இருக்கும் நேரத்தில் அவரை சபைக்கு வருமாறு சவால் விடுக்கின்றோம்

இதற்கு அரச தரப்பு எம்.பி. யான முன்னாள் இராஜாங்க அமைச்சரான காஞ்சன விஜேசேகர பதிலளிக்கையில், எதிர்க்கட்சியினர் சபையில் இல்லாத நேரம் பார்த்து ஜனாதிபதி சபைக்கு வரவில்லை. அவர் துணிச்சலுடன்தான் சபைக்கு வந்தார். ஆனால், ஜனாதிபதி சபைக்கு வருவதனை அறிந்து எதிர்க்கட்சியினர் ஓடி ஒளிந்து விட்டனர் என்றார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான கயந்த கருணாதிலக்க கூறுகையில்,ஜனாதிபதி சபைக்கு வருவதனை அறிந்து நாம் ஓடி ஒளியவில்லை. வியாழக்கிழமை நாட்டின் பல பகுதிகளிலும் எமது கட்சியினரின் ஆர்ப்பாட்டங்கள் நடந்ததால் நாம் அதில் பங்கேற்கவே சென்றோம் என்றார்.



# நாலில் ஒன்று கூட இல்லை

## கிளிநொச்சி மாவட்டத்தின் உணவுத் தேவையைக் கூட நிறைவு செய்யமுடியாத அவலம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்









பொருளாதார நெருக்கடி மற்றும் சேதன உரப் பயன்பாடு என்பவற்றால் வடமாகாண மக்களின் வாழ்வாதாரத் தொழில்களில் ஒன்றாகக் காணப்படும் விவசாயச் செய்கையில் உரிய வருமானம் கிடைக்காமையால் விவசாயிகள் இம்முறை பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் மக்களில் 65 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். இவ்வாறு விவசாயத்தை நம்பி வாழும் குடும்பங்கள், ஒவ்வொரு போகத்திலும் வரட்சிப்பாதிப்பு, விளைபொருட்களை உரிய காலத்தில் உரிய விலைகளில் சந்தைப்படுத்த முடியாமை எனப் பல்வேறு நெருக்கடிகளை கடந்த காலங்களில் எதிர்கொண்டாலும் தற்போது சேதன உரப்பாவனையும் எரிபொருள் தட்டுப்பாடும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனக் காணிகள், மானாவாரி பயிர்ச்செய்கை நிலங்கள் என 69 ஆயிரம் தொடக்கம் 70 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வருடாந்தம் நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்படி உற்பத்தியில் கிளிநொச்சி மாவட்டத்தின் உணவுத்தேவைக்கு ஏறத்தாள 22 ஆயிரத்து 310 மெற்றிக்தொன் தேவைப்படுகின்றது. இதைக்கூட இம்முறை உற்பத்தி செய்ய முடியாத நிலையிலேயே, இந்த மாவட்டம் காணப்பட்டதாக விவசாய அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில், இவ்வாண்டு கால போக அறுவடையில் ஹெக்ரேயர் ஒன்றுக்கு இரண்டு முதல் மூன்று மெற்றிக் தொன் வரையான விளைச்சல் கிடைத்துள்ளதாக மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாரிய மற்றும் நடுத்தர சிறிய நீர்ப்பாசன குளங்கள் மற்றும் மானாவாரி பயிர்செய்கை நிலங்கள் உள்ளடங்கலாக சுமார் 69 ஆயிரம் ஏக்கர் முதல் 70 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் கால போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவு பெற்றுள்ளன.

இந்த நிலையில் நெல்லுக்கான உரிய விலை கிடைத்தாலும் கடந்த காலங்களில் அறுவடைகள் மூலம் கிடைக்கப்பெற்ற உற்பத்திகளை விட இந்த முறை குறைந்த அளவு விளைச்சல்களே கிடைத்துள்ளன என்றும் இதனால் பாரிய நட்டத்தை எதிர் கொண்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

போதிய உரவகைகள் இன்மை, களை நாசினிகள் இன்மை காரணமாக சில இடங்களில் விவசாயிகள் தங்களுடைய பயிர் செய்கைகளை கைவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இரசாயன உரங்களை தடுத்து நிறுத்தி, சேதனப் பசளை பயன்படுத்தி விவசாயத்ததை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில் உரத் தட்டுப்பாடு, கிருமி நாசினிகள், களை நாசினிகள் தட்டுப்பாடு காரணமாக குறித்த விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் அறுவடைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, கடந்த போகங்களில் ஹெக்டேர் ஒன்றுக்கு 4.3 மெற்றிக் தொன் முதல் 4.5 மெற்றிக் தொன் வரையான விளைச்சல் கிடைத்திருந்தன.

இந்தப் போகத்தில் விளைச்சல் குறைவடைந்துள்ளது. அதாவது ஹெக்ரேயர் ஒன்றுக்கு இரண்டு மெற்றிக் தொன் முதல் 2.5 மெற்றிக் தொன் வரையான விளைச்சல் மாத்திரமே கிடைத்துள்ளதாக மாவட்ட பிரதி மாகான விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செய்கையின் போது உரிய களைக் கட்டுப்பாடு இல்லாத நிலையில் 13 ஆயிம் ஏக்கர் வரையில் கைவிடப்பட்டாதவும் குறிப்பிடப்பட்டது.

கடந்த கால விளைச்சல்களில் கிடைத்த உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கை கூட பெற்றுக் கொள்ளமுடிய வில்லை என்றும் பலரும் தெரிவித்துள்ளனர்.

கால போகம் நிறைவு பெற்று மாவட்டத்தில் 25,000 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான முன்னாயத்த செயற்பாடுகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயிகள் நிலப்பண்படுத்தலுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இதற்கான ஒழுங்கு படுத்தல்கள் மாவட்ட செயலகத்தால் செய்யப்பட்டிருந்தாலும் அதனை சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நடைமுறைப்படுத்தவில்லையென விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்வாறு விவசாயத்தையே நம்பி வாழும் விவசாயிகள், தொடர்ந்தும் இவ்வாறான பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றமை குறித்து கவனம் செலுத்தப்பட்டு, விவசாயிகளின் குறைபாடுகள் களைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஏனெனில், இன்று மக்கள் எதிர்கொள்ளும் பட்டினிப் பிரச்சினைகள் நாளையும் தொடரக்கூடாது; இன்றே அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது யாவரினாலும் இலகுவில் விளங்கிக் கொள்ளத் தக்க அம்சங்கள் ஆகும். எனவே, தக்கதருணத்தில் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும் என்பது, இந்த நாட்டில் சோற்றை பிரதானமாக உண்ணும் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.





# முள்ளம்பன்றிகள் தின்ற தென்னம்பிள்ளைகள்

## தென்னந்தோட்டத்தை பராமரிக்க, இத்தாலியில் இருந்து அனுப்பிய பணத்துக்கு, நடந்தது என்ன என்று கேட்ட வர்த்தகரை கொலைசெய்து, அதே தோட்டத்தில் புதைத்ததன் பின்னணி....

ரஸீன் ரஸ்மின்



ஆனமடுவ, வட்டுவத்தேவ குளத்துக்கு அருகில் உள்ள காணியில் ஒரு வருடத்துக்கு முன்னர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகரின் சடலம், கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) தோண்டி எடுக்கப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் 15 வருடங்களாக, இத்தாலியில் தனது மனைவி, பிள்ளைகளுடன் வியாபாரம் செய்து வந்த கொழும்பு, வெள்ளவத்தையைச் சேர்ந்த 58 வயதுடைய அண்ணாமலை பழனி என்பவருடைய சடலமே, இவ்வாறு தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட புலம்பெயர் தொழிலதிபரான குறித்த வர்த்தகர், தொழில் நிமித்தம் இத்தாலிக்கு சென்றுள்ளதாகவும், பின்னர் அங்கு ஆடை தொழிற்சாலை ஒன்றை நடத்தி வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

2021ஆம் ஆண்டு மே மாதம் ஆறாம் திகதி இலங்கைக்கு வந்திருந்த குறித்த வர்த்தகர், ஆனமடுவ, வட்டுவத்தேவ குளத்திற்கு அருகில் கொள்வனவு செய்திருந்த காணிக்கு, அவர் சென்றதன் பின்னர், மர்மமான முறையில் காணாமல் போனதாக அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில், ஆனமடுவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன்போது, குறித்த வர்த்தகருடன் நெருங்கிய தொடர்பு பேணி வந்தார் என்று சந்தேகிக்கப்படும் ஆனமடுவ, மொன்னேகுளம, கோரலயகம பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது, குறித்த வர்த்தகர் காணாமல் போன நாளிலிருந்து 14 நாள்களுக்குள் 1.4 மில்லியன் ரூபாயை வங்கியில் இருந்து பெறுவதற்காக, குறித்த வர்த்தகரின் ATM அட்டையை, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பயன்படுத்தியுள்ளமை பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

எனினும், கைது செய்யப்பட்ட சமயம் கொலைச் சம்பவம் தொடர்பான எவ்வித ஆதாரங்களும் கிடைக்காத போதிலும், அதுபற்றி எந்தத் தகவல்களும் பொலிஸாரால் உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் சொல்லப்படுகிறது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஆனமடுவ நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும், குறித்த வெளிநாட்டு வர்த்தகரின் மரணம் தொடர்ந்தும் ஒரு வருட காலமாக மர்மமாகவே இருந்தது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவின் (சி.ஐ.டி) கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்பிரிவில் குறித்த வெளிநாட்டு தொழிலதிபரின் மனைவி முறைப்பாடு செய்திருந்தார். மனைவியின் முறைப்பாட்டுக்கு அமைய, முன்னர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நபர், மீண்டும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதோடு, அது தொடர்பில் மீண்டும் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டன.

சி.ஐ.டியினரின் விசாரணைகளின் போது, குறித்த வெளிநாட்டு வர்த்தகர் கொலை செய்யப்பட்டு, அவரது சடலத்தை, அவர் கொள்வனவு செய்த தோட்டத்திலேயே புதைக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

குறித்த வெளிநாட்டு வர்த்தகர், ஆனமடுவ பகுதியில் 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான தென்னந்தோட்டம் ஒன்றைக் கொள்வனவு செய்த பின்னர், அதனை பராமரிப்பு செய்வதற்காகவும், தென்னங்கன்றுகளை நடுவதற்காகவும் 30 இலட்சம் ரூபாயை தனக்கு அனுப்பியதாகவும் இடைக்கிடையே ஒரு தொகை பணத்தை அனுப்பியதாகவும் சந்தேக நபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு மே மாதம் அளவில் ஆனமடுவ பகுதியில் உள்ள தனது தோட்டத்துக்கு வருகை தந்த வர்த்தகர், தான் அனுப்பிய பணம் தொடர்பிலான செலவுகள் குறித்து சந்தேக நபரிடம் கேட்டதுடன், தோட்டத்தில் வேலைகளை மேற்கொள்வதற்காக அனுப்பிய பணத்துக்கு ஏற்ப, தென்னை மரங்களை காணவில்லை என்று கேள்வி எழுப்பியதாகவும் சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதன்போது, வர்த்தகர் அனுப்பிய பணத்துக்கு தான் தென்னங்கன்றுகள் கொள்வனவு செய்து, கூலித் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தி, தென்னங்கன்றுகளை நாட்டி பராமரித்து வந்த போதிலும், முள்ளம்பன்றி போன்ற மரங்களை அழிக்கும் காட்டு விலங்குகள் தென்னை செய்கையை அழித்துவிட்டதாகவும் சந்தேக நபர் வர்த்தகரிடம் தெரிவித்ததாகவும் எனினும் தான் சொன்ன எதையும் குறித்த வர்த்தகர் நம்பாது, தன்னோடு முரண்பட்டுக்கொண்டே இருந்ததாகவும், அதன் பின்னர் கடும் வாக்குவாதமாக மாறியதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

இதன்போது, ஒரு சந்தர்ப்பத்தில் வர்த்தகரை நிலத்தில் தள்ளிவிட்டதாகவும் இதன்போது கீழே விழுந்த அவர் உயிரிழந்ததாகவும் சந்தேக நபர் விவரித்துள்ளார்.

இவ்வாறு வர்த்தகரின் உயிர் பிரிந்த பின்னர், அந்தத் தோட்டத்துக்குள்ளேயே அவரது உடலை, பாய் ஒன்றில் சுற்றி, புதைத்துள்ளதாகவும் சந்தேக நபர் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர், குறித்த வர்த்தகர் புதைக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் விசாரணைகளை முன்னெடுக்கவும், அங்கு புதைக்கப்பட்டதாக கூறப்படும் சடலத்தை தோண்டி எடுக்கவும் குற்றப்புலனாய்வு பிரவினர் ஆனமடுவ நீதிமன்றத்தின் அனுமதியை கோரியிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து, குறித்த தோட்டத்தில் புதைக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள ஆனமடு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இதன்படி ஏப்ரல் நான்காம் திகதி, புத்தளம் தள வைத்தியசாலையின் நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் காலை 9 மணி முதல் சந்தேக நபரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த சடலம் புதைக்கப்பட்ட இடம் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 12 மணித்தியாலங்களின் பின்னரே குறித்த சடலம் புதைத்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு, பின்னர் தோண்டி எடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த ஆனமடுவ நீதிமன்ற நீதவான் குறித்த சடலத்தை பார்வையிட்டு, பிரேத பரிசோதனைக்காக சடலத்தை புத்தளம் தள வைத்தியசாலையின் நீதிமன்ற மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு, குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சடலம் இருந்த இடத்தை அடையாளம் காண்பதற்காக சந்தேகநபர், வர்த்தகரின் காணிக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

அத்துடன், சடலம் தோண்டி எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்கு பெரும் எண்ணிக்கையிலான மக்களும் பார்வையிடுவதற்காக அங்கு ஒன்றுகூடியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், குற்றப்புலனாய்வு பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## கிளிவெட்டி முத்துமாரியம்மன் கோவில்:

# அபகரிப்பு

### தொல்லியல் திணைக்களத்தின் பிரசன்னமும் பொதுமக்களின் எதிர்ப்பும்



அ . அச்சுதன்

**மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சைவத் தமிழ்க் கிராமம் கிளிவெட்டி ஆகும். இக்கிராமத்தில் இருக்கின்ற முத்துமாரியம்மன் கோவில், பல நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த கோவிலாகும்.**




இந்தக் கோவில் தொடர்பில் பண்டிதரும் சைவப் புலவருமான இ. வடிவேல் ஐயா, 1982ஆம் ஆண்டு, திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள் தொடர்பில் ஆராய்ந்து தொகுத்து வெளியிட்ட 'திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள்' என்ற நூலில் கிளிவெட்டி முத்துமாரியம்மன் கோவில், 250 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்டதாக (1982இல்) குறிப்பிடுகின்றார். அத்துடன், இக்கோவில் 1947ஆம் ஆண்டு, ஊர் மக்களால் புனருத்தாபனம் செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

அத்துடன், 1892ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்ற யாழ்ப்பாணம் இரகுநாதர் ஐயரின் வாக்கிய பஞ்சாக்கத்தின் தேவாலய விசேஷ உற்சவாரம்பம் எனும் பகுதியில் இக்கோவிலின் விஷேட உற்சவத்தில் ஒன்றான கேதாரகௌரி விரதம் நடைபெறுகின்ற விவரங்கள் காலாகாலமாக குறிப்பிடப்பட்டு வருகின்றன.

எனினும், இக்கோவிலானது நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலைகளால், பல தடவை பாதிக்கப்பட்டு, மக்களால் புனரமைக்கப்பட்டு வந்த நிலையில், இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைய, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் 1988ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஒன்பதாம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு இலக்கம் HA/5/TM/61) இன்று இக் கோவில் மிகவும் சிறப்பு மிக்கதாக காணப்படுகின்றது.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசனமண்டபங்களைக் கொண்ட அழகான கோவிலின் கருவறையில், சதுர்ப்புஜங்களோடுள்ள முத்துமாரியம்மன் அருள் ஆட்சி புரிகின்றாள். முருகன், விநாயகருக்குத் தனித் தனியாக ஆலயங்கள் இருக்கின்றன .

நித்திய பூசையும், நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை, கந்தசஷ்டி முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. கும்பாபிஷேகத்தின் விழாவைச் சிறப்பு விழாவாகக் கொண்டாடுகின்றார்கள். இக்கோவிலுக்குப் பக்கத்தில் கிளிவெட்டி ஆறு ஓடிக்கொண்டிருப்பதும் கோவிலுக்கு அழகு தருகின்றது.

இப் பிரதேசத்தில், கொடிய அம்மை நோய் நடைபெற்ற காலத்தில், முத்துமாரியம்பாளுடைய அருளால் நோய்பரவாது தடுக்கப்பட்டதாகவும் கடும் வரட்சி ஏற்பட்ட காலத்தில், இந்த அம்பாளைக் கிளிவெட்டி ஆற்றில் வைத்து அபிஷேகம் செய்த போது, மழை கொட்டிய அதிசயமும் இங்கு நிகழ்ந்ததாகவும் இன்றும் ஊர் மக்கள் பெருமை பேசுகிறார்கள்.

### தொல்லியல் திணைக்களத்தின் பிரசன்னம்

இவ் ஆலயத்தில் வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1979-12-14/67 இன் பிரகாரம் தொல்லியலுக்கு சொந்தமான பகுதி ஒன்று இருப்பதாகவும் அதனை மீள அளவீடு செய்ய வேண்டும் எனவும் மூதூர் பிரதேச செயலாளரிடம் தொல்லியல் திணைக்களம் 27.10.2021 அன்று எழுத்து மூலமாக கோரியிருந்தது. இதனைத் தொடர்ந்து இவ் ஆலயத்துக்கான விஜயத்தினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பல தடவைகள் மேற்கொண்டிருந்தனர். இதன் பின்னர் இவ் ஆலயத்தை பாதுகாக்கும் முகமாக ஆலய நிர்வாகத்தினரும், அக்கிராம இளைஞர்களும் தங்களை தயார்ப்படுத்திக் கொண்டு அதனை எதிர் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாரானார்கள்.

மூதூர் பிரதேச செயலாளருக்கு தொல்லியல் திணைக்களத்தினால் 27.10.2021 அன்றைய திகதியிடப்பட்டு வழங்கிய கடிதத்திற்கு அளப்பதற்கான அனுமதியை பிரதேச செயலகம் வழங்கியிருந்தது. அதற்கமைய 28.03.2022 அன்று கிளிவெட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் அளவீடு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார்கள்.

இந்தத் திட்டத்தை முறியடிக்கும் வகையிலும் இக்கோவிலைப் பாதுகாக்கும் வகையிலும் செயற்பட கோவில் நிர்வாகத்தினரும் அக் கிராம இளைஞர்களும் தயாரானார்கள். கோவிலுக்குச் சொந்தமான காணியை தொல்பொருள் திணைக்களம் நில அளவை செய்ய முயன்றதால் அன்று அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

குறித்த கோவி'லுக்குச் சொந்தமான 20 பேர்ச் காணியை தொல்பொருள் திணைக்களமும் நில அளவை திணைக்களமும் இணைந்து அளவீடு செய்ய முயற்சித்ததையடுத்து அப்பிரதேச மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


'எமது ஆலயங்களை அபகரிக்காதே', 'எமது மத உரிமைகளை மதியுங்கள்', 'இன மத ஒற்றுமையை சீர்குலைக்காதே', 'எமது ஆலயம் பூர்வீக வரலாறு கொண்டது', 'நில ஆக்கிரமிப்பு வேண்டாம்', 'தொல்லியலின் போர்வையில் நில ஆக்கிரமிப்பை நிறுத்து' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது மக்களின் ஆர்ப்பாட்டத்தால் நில அளவை நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது. தொல்பொருள் திணைக்களத்தினர் அவ்விடத்தை விட்டு சென்றனர்.

மக்கள் போராட்டத்தினால் இந்த அளக்கும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கான நிரந்தரமான தீர்வை நோக்கி ஆலய நிர்வாகத்தினரும் இளைஞர்களும் பயணிக்க வேண்டும். இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். குறிப்பாக, இவ் விடயத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனம் எடுக்க வேண்டும். எடுப்பார்களா...?



# சோழர்கால சிவன் கோவிலில் சிவலிங்கம் பிரதிஸ்டை



விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா





சோழர்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு, தூர்ந்து காடுமண்டிக்கிடந்த மடத்தடி மாட்டுப் பளையிலுள்ள மிகவும் பழைமை வாய்ந்த சிவன் கோவிலில் புதன்கிமை (06) அழகிய சிவலிங்கம் பிரதிஸ்டை செய்துவைக்கப்பட்டது. இது, மடத்தடி மீனாட்சி அம்மன் கோவிலுக்கு மேற்காக, வயல் சார்ந்த இயற்கை எழில்கொஞ்சும் மருதநிலத்தில் அமைந்துள்ளது.

இக்கோவிலுக்கு விஜயம் செய்த தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் உள்ளிட்ட வரலாற்று ஆய்வாளர்கள் பலரும், கோவிலின் வரலாற்று மூலங்களை ஆய்வுசெய்துள்ளனர்.

காடு மண்டிக்கிடந்த இக்கோவில் அமைந்துள்ள சூழலைத் துப்புரவுசெய்து, இடிபாடாகக் காணப்பட்ட கோவிலை, பழைமை குன்றாது புனரமைத்து, அதே இடத்தில், அழகு மிகுந்ததும் கண்டதும் கையெடுத்துக் கும்பிடத் தோன்றும் தோற்றம் அமையப்பெற்றதுமான சிவலிங்கம், பக்தர்களின் வழிபாட்டுக்காக பிரதிஸ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு, தற்போது தூர்ந்து, சிதைந்து கிடக்கின்ற மடத்தடி சிவன் கோவில் முன்றலில், சிவலிங்கம் நிறுவுவதற்கான பீடமொன்றுக்கு அடிக்கல்நடும் வைபவம், 2022 பெப்ரவரி மாதம் புதன்கிழமை (16) பௌர்ணமியன்று நடைபெற்றது.

சிவனருள் பவுண்டேசன் ஆதரவில் ஆலயத்தலைவர் கி. ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம், மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபக இயக்குநர் மு.ஜெயபாலன், சிவனருள் பவுண்டேஷன் மாவட்ட தலைவர் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுசியா சேனாதிராஜா, மாவட்டச் செயலாளர் கே. வாமதேவன், பொருளாளர் ரி. ஜனார்த்தனன், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு. உதயசிறிதர், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா. நடராஜா, ஆலயபரிபாலன சபை ஆலோசகர்களான வி.ரி. சகாதேவராஜா, வா.குணாளன், வ. ஜெயந்தன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டினர்.

அடிக்கல் நாட்டப்பட்ட பீடத்தில், சிவனருள் பவுண்டேசன் அனுசரணையில் மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபகரும் இயக்குநருமான மு. ஜெயபாலனின் ஏற்பாட்டில், அம்மனின் கும்பாபிசேகமன்று (ஆறாம் திகதி) அதிகாலையில் தமிழ் மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டு, தமிழ் முறைப்படி சிவலிங்கம் குடமுழுக்கு செய்யப்பட்டு, பிரதிஸ்டை செய்துவைக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டில், முன்னாள் தலைவர் கோ. கமலநாதன் இருந்த காலத்தில், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், ஆலய ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா, இந்து கலாசாரஅலுவலர் உள்ளிட்டோர் விஜயம்செய்து பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தின் தோற்றம் சோழர்காலத்துக்கு உரியது என வரலாற்றாய்வாளர்கள் ஆதாரங்களுடன் கூறியுள்ளனர். குறிப்பாக, பொலநறுவையை மையமாகக்கொண்டு, சோழர் 52 ஆண்டுகள் ஆட்சி செய்த காலத்தில், இவ்வாலயம் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.







### சோழர்களின் பொலநறுவை ஆட்சி

பொலன்னறுவை இராச்சியம் அல்லது பொலன்னறுவை இராசதானி என்பது அநுராதபுர இராச்சியம் சோழர்களால் கைப்பற்றப்பட்ட பின்னர், அவர்களால் இலங்கையில் உருவாக்கப்பட்ட இராச்சியம் ஆகும்.

கி.பி 1017- கி.பி 1236 காலகட்டத்துக்கு உரிய காலத்தில், இலங்கையில் சோழர் ஆட்சிக்குட்பட்ட பகுதி, 'மும்முடிச் சோழ மண்டலம்' என அழைக்கப்பட்டது. இலங்கையின் நீர்வள நாகரிகத்தின் பொற்காலமாக இதைக் குறிப்பிடலாம்.

அநுராதபுர காலத்தின் போது, பொலன்னறுவை புகழ் வாய்ந்த நகரமாகக் காணப்பட்டது. ஐந்தாம் மகிந்தன், அநுராதபுர இராசதானியை ஆட்சி செய்த போது, இராசேந்திர சோழன் என்ற சோழ மன்னனால், இராசரட்டை கைப்பற்றப்பட்டது. பின்னர் அப்பகுதி சோழப் பேரரசின் பகுதியாகியதுடன் அது 'மும்முடிச் சோழ மண்டலம்' எனப்பெயரிடப்பட்டது.

பின்னர், உருகுணையில் ஐந்தாம் மகிந்தன், இராசேந்திர சோழனால் கைதுசெய்யப்பட்டு, சோழ நாட்டுக்கு கைதியாக கொண்டு செல்லப்பட்டான். சோழர்களால் மகாவலி கங்கையால் சூழப்பட்ட பொலன்னறுவை தலைநகரமாக தெரிவு செய்யப்பட்டது. பொலன்னறுவை சோழர்களால் 'ஜனநாதபுரம்' என்று அழைக்கப்பட்டது.

சோழர்கள் 52 ஆண்டுகள் இங்கு ஆட்சி செய்தார்கள். சோழர்களை தோற்கடித்த முதலாம் விஜயபாகு, பொலன்னறுவையின் முதலாவது சிங்கள மன்னனாவான். இவ்வரசன் பாண்டிரோடு திருமண உறவுகளைச் செய்தான்.

கலிங்க மாகனின் படையெடுப்புடன் பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியுற்றது. இவன் கி.பி 1215 இல் பலம்வாய்ந்த ஏறக்குறைய 24,000 பேரைக் கொண்ட கேரளப் படையை கொண்டு இலங்கையை ஆக்கிரமித்தான்.

சோழர் ஆட்சிக்காலத்தில், இலங்கையில் இந்து மதத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. அதேவேளை அவர்களால் பௌத்த மதமும் பாதுகாக்கப்பட்டது. பொலன்னறுவையிலுள்ள சிவன் கோவில்களுள் ஒன்று மீள்கட்டுமானம் செய்யப்பட்டது. இதன் பின்னணியிலேயே சோழர்களால் மடத்தடி சிவன் கோவில் அமைக்கப்பட்டது.

பிற்காலத்தில் 16ஆம் நூற்றாண்டு காலமுற்பகுதியில், இலங்கையை முதலில் ஆக்கிரமித்த ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர் இந்துக் கோவில்களை அழித்து சேதமாக்கியதை வரலாற்றாய்வார்கள் கூறி நிற்கின்றனர். மண்டுர் முருகன் கோவில், திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் என்பனவும் போர்த்துகேயரின் கைவரிசைக்கு முழுமையாக இலக்கான பண்டைய கோவில்களாகும்.

அவ்வழிப்பின் ஓரங்கமாக, மடத்தடி சிவன் கோவிலும் தகர்த்து அழிக்கப்பட்டு இருக்கலாமென நம்பப்படுகிறது. அதன்பிறகு, இக்கோவில் கவனிப்பாரற்ற நிலையில் காடுமண்டி, பற்றைகள், புதர்கள் வளர்ந்து மறைந்து காணப்பட்டது.

அவ்வளாகத்தில், நீர்ச்சுனையும் இராஜநாகம் வாழும் பிரதான பாம்புப் புற்றும் இருந்தது. ஆக இவையும் பண்டைய கோவில் எச்சங்களும் இன்றும் இருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

மடத்தடியில் சிதைந்துகிடந்த இப்புராதன சிவன் கோவிலை சிவனருள் பவுண்டேசன் துணையுடன், மட்டக்களப்பு ஆதீனம் சிவலிங்கமொன்றை பிரதிஸ்டை செய்து, புனரமைத்துள்ளமையானது வரலாற்றுக் கடமை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது எனக் கொள்ள முடியும்.

ஆம்! இந்த அருள்பாலிக்கும் சிவலிங்கத்தால், இனிவரும் காலங்களில் தொடர் வழிபாட்டுக்குரிய கோவிலாக இவ்விடம் திகழும் என்பது கண்கூடு.



# பிஞ்சு மனங்களில் நஞ்சை ஒருபோதும் விதைக்கவே வேண்டாம்

நாணயம் ஒன்றுக்கு இரண்டு பக்கங்கள் இருப்பதைப் போல, ஒவ்வொரு செயற்பாடுகளிலும் நல்லது, கெட்டது என்ற இரண்டு பக்கங்கள் இருக்கவே செய்யும். ஆகையால். ஒன்றைக் கையாளும் போது, மிகக் கவனமாகக் கையாள வேண்டும்.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு நாளும், அரசாங்கத்துக்கு எதிராகவும் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும், போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். காணாமலாக்கப்பட்ட தங்களுடைய உறவுகளைத் தேடி, நடத்தப்படும் போராட்டங்களும் நீண்டுகொண்டே செல்கின்றன.

இந்நிலையில், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நாடுபூராகவும் இரவு, பகலாக முன்னெடுக்கப்படுகின்றன. நீண்ட நேரமல்ல; பல நாள்களாக வரிசையில் நின்றிருந்த மக்கள், கோபமடைந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். வரிசையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்களில் பல்வேறு மட்டங்களில் வியாபித்து, தொழிற்றுறை சார்ந்தவர்களும் இறங்கியுள்ளனர்.

அரசியல் கட்சிகள் சார்பற்ற இந்தப் போராட்டங்களில், குழந்தைகளையும் பங்கேற்க செய்கின்றனர். பாடசாலை மாணவர்களும் சிறுவர்களும் சிறுமிகளும் பங்கேற்றுள்ளனர்.

எரிபொருள், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் என்பவற்றால், சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் பிரச்சினை இல்லையென நினைத்தால், அதுதான் முட்டாள்தனமாகும். எனினும், சிறுவர், குழந்தைகளுக்கென ஓர் உலகம் உள்ளது.

உரிமைகளை வெற்றெடுப்பதற்காக குரல் கொடுக்கவேண்டும். எனினும், சில போராட்டங்களின் மீது, கண்ணீர்ப்புகை பிரயோகம், குண்டாந்தடி பிரயோகம் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது பின்வாங்கி ஓடுகையில், கீழே விழுந்து பலரும் காயமடைந்துள்ளனர்; மயக்கமடைந்துள்ளனர்.

பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட பலரும், நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் மட்டுமன்றி, எந்தவொரு போராட்டத்திலும், சிறுவர்கள், குழந்தைகள், பாடசாலை மாணவர்களை இணைத்துக்கொள்வது மகா தவறாகும். சிலவேளைகளில், பிஞ்சு மனங்களில் 'எதிர்ப்பு' விதைக்கப்படுகிறது. இந்த நஞ்சு, எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை விளைவிக்கும் என்பதை நினைவூட்டுகின்றோம்.

பிரச்சினைகள் உள்ளன. அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில், ஆராய்வதற்கு பிள்ளைகளுக்கும் இடமளிக்க வேண்டும். இல்லையேல் வளர்ந்ததன் பின்னர், எதற்கெடுத்தாலும் எதிர்ப்பு கோஷங்களை எழுப்பத் தொடங்குவர். தீர்வுகளைப் பற்றி சிந்திக்கமாட்டார்கள்.

நாடு தற்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளால், சிறுவர்கள், குழந்தைகள், பாடசாலை மாணவர்களே ஆகக்கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

போஷாக்கான உணவு, பரீட்சைக்கான காகிதாதிகள், மின்சாரத் தடை, பாடசாலை வாகனங்களின் கட்டண அதிகரிப்பு, தனியார் வகுப்பு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை இவ்வாறு அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

அதற்காக, சிறார்களை வீதிக்கு இறக்கி, போராட்டக்களத்தில் குதிக்கச் செய்வது, பிஞ்சு மனங்களில் நஞ்சை விதைப்பதாகும். இது எதிர்காலத்தை இருட்டாக்கும் என்பதே எமது கணிப்பு.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# பொறுப்பை உணர்வதும் முக்கியம்

**லக்ஸ்மன்**

மக்கள் கிளர்ச்சி அடிப்படைவாதத்தின் பாலான ஒன்றாக மாறிவிடும் ஆபத்து இலங்கைக்கு ஏற்பட்டிருக்கிறது.

மக்களை அடிப்படைவாதம், அதன் கட்டுக்குள் வைத்திருக்கின்ற நிலையானது மிகவும் பாரதூரமான அழிவையே எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்று அனைவரும் அச்சப்பட வேண்டியதே இதற்குண்டான பிரதிபலனாக இருக்கப்போகிறது.

கடந்த காலங்களின் பிழையான தீர்மானங்கள், விட்டுக் கொடுப்பின்மை, உரிமைகளை கௌரவிக்காமை, மதிப்பளிக்காமை காரணமாக, நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினையானது தீர்வுக்கு உட்படுத்தப்படாமலேயே காலங்கடத்துகின்ற ஒரு பாரதூரமான விடயமாக இருந்துவருகிறது.

உரிமைகள் மீறப்படுவதானது, தாம் செய்த பிழைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான வழியாக இருக்கும் வரையில், காலங்கடத்துதல் என்பது தொடர்ச்சியானதாகவே இருக்கும்.

கவலை நிறைந்த சிந்தனையுடனேயே மக்கள் அன்றாடம் ஒவ்வொரு நிமிடத்தையும் செலவு செய்ய வேண்டிய சூழல் உருவாகிவிட்டது. இந்தச் சூழலை மாற்றுவதற்கு, நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்றத்தின் ஒவ்வோர் உறுப்பினர்களும் சிந்தித்துச் செயற்படவேண்டியது கட்டாயமாகும்.

நாட்டின் இன்றைய நிலை குறித்து அலசுகையில், பொருளாதாரப் நெருக்கடியின் தோற்றுவாய் எங்கிருந்து ஆரம்பித்தது என்பதை யாரும் கண்டுபிடிக்கத் தலைப்படவில்லை. ஒவ்வோர் அரசாங்கம் உருவாகும் போதும், தாம் நினைத்ததை செய்துவிடுகின்ற சூழல், இயலுமை தமக்கிருப்பதாகத்தான் ஒவ்வொருவரும் இறுமாப்புக் கொள்கிறார்கள். அதனால், அடுத்துவரும் அரசாங்கம் அவற்றால் ஏற்படும் அபாயங்களைச் சீர்செய்பவர்களாகவே இருக்கவேண்டியநிலைதான் இலங்கையின் யதார்த்தம்.

ராஜபக்ஷ அரசாங்கம் உருவானது முதல், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அதிவேக நெடுஞ்சாலை வேலைத்திட்டம், காபட் வீதி அமைப்புகள் போன்றவை, நாட்டின் அதிக நிதியை செலவுக்கு உட்படுத்திவிட்டன. அதேநேரத்தில், வெளிநாடுகளில் பெற்ற கடன்களுக்கான வட்டி, தவணைக் கொடுப்பனவுகள் மக்களை மேலும் சுமைகளைத் தூக்க வேண்டியவர்களாக மாற்றியது. கிருமிநாசினிகள், இரசாயனப் பசளைத்தடை போன்றவை மக்களை நெருக்கடிக்குள் தள்ளின. இப்போது எரிபொருளுக்கு நீண்ட வரிசைகள்.

யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கு மக்கள் துன்பங்களை அனுபவித்தபோது, நாட்டின் ஏனைய பிரதேசங்களின் பெரும்பான்மை மக்கள், அவர்களின் துன்பங்களை கணக்கில் எடுத்திருக்கவில்லை. அவ்வேளையில், வேற்று நாடு ஒன்றின் மீது யுத்தம் நடத்துவதாகவே அனைத்தையும் செலவு செய்துவிட்டு, நாட்டின் செல்வம் அனைத்தையும் மேலைநாடுகளுக்கு தாரைவார்க்கும் நிலைப்பாட்டுக்கு வந்திருந்தனர். ஆனால், இன்றைய நிலைமைக்கு, அது ஒன்றே காரணமில்லையானாலும் முக்கிய காரணம் என்பதனை உணரவேண்டியது கட்டாயமே.

இன்னமும் பல வருடங்களுக்குத் தொடரவிருக்கின்ற இப்பொருளாதாரப் பிரச்சினைக்கு, நினைத்த மாத்திரத்தில் தீர்வு கிடைத்துவிடும் என்று நப்பாசை கொள்வது மிகப்பெரும் ஆபத்து. இப்போதும் எங்கு கடன்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சிந்திக்கின்ற நிலைமையில் மாற்றம் ஏற்படுவதற்கு ஒரே வழி, இலங்கை சுதந்திரமடைந்தது முதல் இருந்துவருகின்ற தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்தி, புலம்பெயர் மக்களின், தவணைக் கொடுப்பனவு செலுத்தத் தேவையில்லாத, வட்டிகள் கொடுக்க வேண்டியிராத நிதிகளை பெற்றுக்கொள்வதாகும்.

ஆனால், புலம்பெயர் தமிழர்கள் முதலிட முயலும்போது கூட, ஆயுளுக்கும் அவர்களுக்குக் கிடைக்கும் வருமானத்தை விடவும் அதிகமான பணத்தினை அனுமதி வழங்குவதற்கான தமக்கான பிரதியுபகாரமாக எதிர்பார்த்தால், யாரும் முதலிட விரும்பமாட்டார்கள். இப்போதுள்ள ஒரேயொரு வழியாக புலம்பெயர்ந்துள்ளவர்களின் நிதியை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சியே பாதிப்பற்ற முறை என்பதை, அதிகாரத்திலுள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை, முஸ்லிம் மக்களின் பெரும்பான்மையானவர்கள் கடந்த 2005 முதலே இந்த அரசாங்கத்தை எதிர்த்து வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். தங்கள் சமூகத்தின் நலன் என்று கூறிக்கொண்டு, தங்களது சுயநலன்களையே கவனத்திலெடுத்திருந்தனர்.

ஆனால், இன்றைய பொருளாதாரப் பிரச்சினை விடயத்தில், நாட்டில் பெரும்பான்மை இன மக்கள் போராட்டம் நடத்தும் போது, அதில் பங்கெடுப்பதில் எமது சமூகத்திற்கு இருக்கும் ஆபத்தை விட, நாம் தனியாக போராட்டம் நடத்தும் போது இருக்கும் ஆபத்து அதிகம் என்பதை நாம் உணர வேண்டும் என்று, முஸ்லிம் தரப்புகள் அந்த மக்களை வழிப்படுத்தும் நிலையும் காணப்படுகிறது.

அதற்கு அவர்கள் சொல்கின்ற காரணங்களாக, எமது நாட்டில் கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகம் அனுபவித்த கசப்பான சம்பவங்களின் உண்மையான காரணங்களில் முதன்மையானது ராஜபக்ஷ எதிர்ப்பு வாதம் ஆகும்.

இலங்கை தேசத்தின் வளர்ச்சியில் பாரிய பங்காற்றிய முஸ்லிம் சமூகம், நசுக்கப்படும் சமூகமாக கடந்த காலங்களில் இருந்து வந்தமைக்கான காரணம், முஸ்லிம்களின் தலைமைகளின் பிழையான தீர்மானங்களே என்பதை கசப்பாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம். முஸ்லிம் சமூகத்தின் குரல்வளைகள் நசுக்கப்பட்ட போது, முஸ்லிம் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது, புனித பள்ளிவாசல்களில் நாய்கள் மோப்பம் பிடிக்க அழைத்து வரப்பட்ட போது, அப்பாவி இளைஞர்கள் வீண்பழி சுமந்த போது, முஸ்லிங்களின் சட்டங்களில் அதிகாரம் பாய்ந்த போது, அமைதிகாத்த தலைமைகள், இப்போது நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கு தனி அடையாளம் கொடுத்து, தனியே முஸ்லிங்கள் பாதிக்கப்படும் பிரச்சினைகள் போன்று விம்பத்தை உருவாக்கி, தனி முஸ்லிங்களின் போராட்டத்தை முன்னெடுப்பது, இலங்கையில் வாழும் எதிர்கால முஸ்லிம் சந்ததிகளுக்கு ஆபத்தாக அமையும் என்பதை கடந்த கால வரலாறுகள் தெளிவாக எமக்கு எடுத்து காட்டியுள்ளன.

நாட்டின் மேம்பாட்டுக்காக இலங்கையர்களாக ஒன்றிணைந்து பிராத்திக்க வேண்டிய நேரத்தில் நாம் பேரணிக்காக தயாராவது பிழையான தீர்மானமாக அமைந்துள்ளது என்றே அவர்கள் கொள்கிறார்கள்.

'அரபு உலகம்' உண்மையில் எண்ணெய் வளத்தில் பலமுடையது என்றவகையில், முஸ்லிம் நாடுகளின் நலன்புரிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் மற்றொரு வழிமுறையாம். அதற்கு முஸ்லிம்களுடைய உரிமைகளையும் நலன்களையும் அரசாங்கம் அனுசரிக்க வேண்டியது முக்கியமாகும்.

நாட்டுக்கு முன்பெல்லாம் கச்சா எண்ணையாக நாட்டுக்குள் கொண்டுவரப்படும் எரிபொருள் இப்போது எரிவாயு, டீசல், பெற்றோலாகக் கொண்டு வருவதற்கான தேவை என்ன இருக்கிறது. இவ்வாறு முடிவுப்பொருட்களாக கொள்வனவு செய்கின்றவேளை, நாட்டின் உழைப்பின் பிரதிபலனும் நாட்டுக்கு வெளியே டொலராகவே வெளியேறுகிறது. இதுகூட ஒருவகையில் ஆபத்தானதே.

எதிர்காலத்தை கவனத்தில் கொள்ளாது, கண்களை மூடிக்கொண்டு மனதில் பட்டதையெல்லாம் செயற்படுத்தும் வல்லரசுத் தனத்துடனோ, வளர்ச்சியடைந்த நிலையிலேயோ நமது நாடு இல்லை என்பதை, நாட்டின் தலைவர்கள் பொறுப்புடன் புரிந்து கொள்ளவேண்டும்.

உலக நாடுகளின் அரசியல் தலைவர்கள் தமது பிழைகளை ஏற்றுக் கொண்டு, அடுத்த நிமிடத்திலேயே பதவிகளைத் தூக்கி எறிந்துவிடும் நிலைமையே காணப்படுகிறது. இலங்கை நாட்டைப் பொறுத்தவரையில், அதற்கு எதிர்மாறுகளே நடைபெறுகின்றன. தம்மைப் பாதுகாப்பதாகவும் தம்முடைய கௌரவத்திற்காகவும் பிடிவாதத்துக்காகவும் நாட்டு மக்களையே நாட்டின் தலைவர்கள் பலியாக்குகிறார்கள். இந்தப் பலியெடுத்தல், மக்களை மாத்திரமல்ல நாட்டின் முழு எதிர்காலத்தையுமே பலியெடுக்கிறது என்பது தெளிவாகவேண்டும்.

இந்த இடத்தில்தான், சரியான நேரத்தில் எடுக்கப்படும் பிழையான முடிவும் பிழையான நேரத்தில் எடுக்கப்படும் சரியான முடிவும் ஆபத்தை தரவல்லதாக அமைந்துவிடும் என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

அந்தவகையில்தான், முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம் சமூகத்தை சரியாக வழிநடத்த வேண்டியதும், தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களை வழிப்படுத்துவதும், சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்களை வழிநடத்திக் கொண்டு செல்லவேண்டிய தேவையும் முதன்மைப்படுகிறது.

ஆட்சியைப் பிடிப்பதற்காக முண்டுக்கு நின்றவர்கள் இப்போது மண் கௌவி விட்டாதாகவே அரசியல் பிரசாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. இனவாதமும் அரசியல் குரோதமும் பாராட்டும் நமது நாட்டின் அரசியல் அரைவேக்காட்டுத்தனத்துக்கும் மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்.

அந்த வகையில்தான், பொறுப்புணர்வும் நாட்டின் மேம்பாட்டை முன்கொண்டு செல்லக்கூடியதும், ஊழல்கள் அற்றவர்களும் அரசியலுக்குள் கொண்டுவரப்படுதல் உணரப்பட வேண்டும். நிதிபலம் இருந்தாலொழிய வேறு யாரும் அரசியலுக்குள் நுழையமுடியாது என்ற நிலைப்பாட்டில் மக்கள் மாற்றத்தினை கொண்டுவரும் பொழுதே நாட்டின் நலனும், பொறுப்பும் பாதுகாக்கப்படும்.

'நான் பதவி துறந்தால் நாட்டை யார் காப்பாற்றுவார்கள்' என்ற எண்ணம் பொறுப்பின்மையின் வெளிப்பாடாகும். அதற்காக மக்கள் சமூகம் நசுக்கப்படும் பொழுது, அமைதியாக இருந்து வேடிக்கை பார்க்க முடியாது. உண்மையாக இருந்தாலும் காலத்தின் தேவையும் உணரப்பட வேண்டும். ஆனாலும், அரசாங்கத்தின் தடுமாற்றம் நிதானமாவதற்குரிய காலம் கனியவேண்டுமென்று அனைவரும் எதிர்பார்ப்போம்; அதற்காகச் சாத்தியமான வழிகளில் முயற்சிப்போம்.



## வாழ்வியல் தரிசனம்

ஒருவர் செய்யும் சின்னச் சின்ன காரியங்களின் ஊடாக, அவரது குணநலன்கள், பண்புகள் புலனாகும்.

எடுத்த எடுப்பில் நாம் எதையும் முழுமையாக முடிவு செய்ய முடியாது. ஒரு சின்னப் பொருளையே வாங்குவதற்குத் திணறுபவர்கள், எப்படி மனிதனை எடைபோட முடியும்?

உலகம் முழுவதும் மக்கள் கூட்டம் வாழ்கின்றனர். ஆனால், ஒருசிலர் ஒருவருடனும் பேசாமல் தனித்து இருப்பார்கள். கேட்டால் யாரை, நம்புவது என்பார்கள். அப்படியானால், இவரை மட்டும் மற்றவர்கள் எப்படி நம்ப முடியும்?

எல்லோரையும் எடைபோட முயற்சிக்கின்றோம். அப்படியான மனிதன், முதலில் 'நான், சுத்தமான எண்ணங்களுடன் வாழ்கின்றேனா' என, சுயஅலசல் செய்ய வேண்டும்.

அநேகர் சுயநலத்துடன்தான் சிந்திக்கிறார்கள் என எண்ணத் தோன்றுகின்றது. தன்னைத்தான் சுத்திகரிக்காமல், பிறர் பற்றி விமர்சனம் செய்கிறார்கள். அதைவிட சும்மா இருந்தாலே போதுமானது. அவர் தன்னைத்தான் உணரும் நிலை வரலாம். கண்டதை எல்லாம் ஆராயக்கூடாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சமய பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லை

இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில், தமிழ் மொழி மூலம் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, சமய பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் கத்தோலிக்கம், கிறிஸ்தவம், முஸ்லிம் ஆகிய சமய மாணவர்களுக்கு, சமய பாடங்களைக் கற்பித்துக் கொடுப்பதற்கு, ஆசிரியர் இல்லாத நிலைமையால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் மாற்று மதங்களைப் பின்பற்றும், எண்ணிக்கை குறைவான மாணவர்களே இவ்வாறு பிரச்சினையை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரச பாடசாலையில் கற்கும் ஒவ்வொரு மாணவரும், தாம் பின்பற்றும் சமய பாடத்தைக் கற்கும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் இது தொடர்பாக பாடசாலை நிர்வாகங்கள் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் பாதிக்கப்படும் மாணவர்களின் பெற்றோர் வேண்டுகோள் முன்வைத்துள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களாக கொவிட்-19 பெருந்தொற்று பரவுகை காரணமாக, பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் குழப்பகரமான நிலைமைக்கு உட்பட்டன. தற்போது, மாணவர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகள் களையப்பட்டு வருகின்றன. எனவே, எட்டாம், ஒன்பதாம், பத்தாம், 11ஆம் ஆண்டுகளில் கல்வி கற்கும் மாணவர்கள் குறிப்பாக க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தயார்படுத்தும் மாணவர்கள் தமது பாடவிதானங்களை முழுமைப்படுத்தி, பரீட்சைக்குத் தயார்படுத்தும் வகையில் சாத்தியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

–மதுசேகரன் வீ



வாழ்க்கைப் பாதையில்

# விழியாகும் மொழி

## அடுத்தவரின் மொழியை நாம் அறிந்திருப்பது விலை மதிக்க முடியாத சொத்து


ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com




ஒரு குழந்தை பிறக்கும்போதே, தனக்குச் சொந்தமான மொழியை அழுகுரலில் கலந்து, ஓசையோடு வெளிப்படுத்துகின்றது.

மொழிக்கு இனமத பேதமில்லை. ஆயினும், எமது நாடு மொழியை அடிப்படையாகக் கொண்டு, இன்னமும் பிளவுபட்டுத்தான் நிற்கிறது.

“அடுத்தவரின் மொழி உங்களுக்குத் தெரிந்தால், ஆயிரம் நட்புறவுகள் அமைந்து விட்டது என்று அர்த்தம்”. இந்த வார்த்தையை, காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அடிக்கடி சொல்வது வழக்கம். “மொழி அடுத்தவரோடு அன்பை வளர்க்கும் கருவி” என்றும் அவர் கூறுவார்.

“தமிழ் மொழிக்கு உரித்தான கௌரவத்தை வழங்காத பழக்க தோஷம் காரணமாகவே, நாம் கடந்த 30 ஆண்டுகாலம் துன்பியல் போரை எதிர்நோக்கினோம். பிரச்சினைக்கான தீர்வு, வெடி மருந்துகளிடமும் ஆயுதங்களிடமும் கையளிக்கப்பட்டதன் மூலம், எமது நாட்டுக்கே உரித்தான அனைத்து மனித, பௌதீக அறிவுசார் வளங்களை, அசாதாரணமான முறையில் அழித்துக் கொண்டோம். இவை அனைத்தையும் விட எமது மனிதத்துவத்தையும் மனித நேயத்தையும் நாம் அழித்துக் கொண்டோம்.

“யுத்தம் முடிவடைந்து விட்டது. ஆனால் யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள் கண்டுகொள்ளப்படவில்லை. எனவே, இப்போதாவது மேற்படி காரணிகளை இல்லாதொழிப்பதற்கு அவசியமான புத்தி எமக்குக் கிட்ட வேண்டும். முக்கியமாக, மொழிப் பிரச்சினைகளை அங்கிகரிப்பதன் மூலம், நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, பொருளாதார அபிவிருத்திக்கான உத்திகளையும் வகுத்துக் கொள்ளலாம்” என்கிறார் மட்டக்களப்பு, சிவில் பிரஜைகள் சபையின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் ஹயாத்து முஹம்மது அன்வர்.

இந்த அமைப்பு, கடந்த 2013ஆம் ஆண்டிலிருந்து முரண்பாடுகளுக்கு ஆக்கபூர்வமாகச் சிந்திக்கும் செயற்பாடுகளில் அக்கறை காட்டி, அதனூடாக சமாதான சகவாழ்வை அடைய ஊக்குவித்து வருகின்றது.

அதன் அம்சங்களில் ஒன்றாக, 2016ஆம் ஆண்டிலிருந்து இப்பொழுது வரை, சகோதர சிங்கள மொழி, இணைப்பு மொழியான ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்றலில் இளைஞர், யுவதிகளை உள்வாங்கி, சுமார் 435 பேருக்கு மொழிக் கற்றல் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கியுள்ளது.

அண்மையில், சிங்கள மொழி டிப்ளோமா கற்கையை முடித்த 135 தமிழ் பேசும் இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் ஓட்டமாவடி தேசிய கல்லூரியில் மார்ச் மாதம் 29ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, சான்றிதழ் வழங்கி வைத்த 231ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் என்.கே.டி. பண்டார, தமதுரையின் போது, மொழி மூலம் இனங்களுக்கு இடையிலான மேம்பாடு குறித்து, பல நல்ல கருத்துகளைத் தெரிவித்தார். குறிப்பாக, “மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு வாழ, மொழியறிவு நமக்கு பல வழிகளில் உதவும். அடுத்தவரின் மொழியை நாம் அறிந்திருப்பது விலை மதிக்க முடியாத சொத்தாகும். அந்த வகையில், சிங்கள மொழி கற்கையை உங்களுக்கு வழங்கும் மட்டக்களப்பு சிவில் பிரஜைகள் சபை, பெரிய சேவையை ஆற்றுகிறது என்பதில் பெருமையடைகின்றேன். நானும் தமிழ் மொழியைக் கற்பதில் ஆர்வமாக இருந்து கற்று வருகின்றேன்” என்றார்.







பிரிகேடியர் என்.கே.டி. பண்டார

உண்மையில், மொழியும் மனித நேயமும் ஒருவரிடத்தில் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது? மொழிப் பாகுபாட்டால் எவ்வாறான குழப்பங்களை எதிர் கொள்கின்றோம்? என்பது பற்றி சம்பந்தப்பட்டோர் கரிசனை கொள்ள வேண்டும்.

“அம்மா” என்பது நாம் கேள்விப்பட்ட மிக இனிமையான சொல். அன்பின் நல்லுணர்வை நாம் தாயிடமிருந்துதான் பெறுகின்றோம். நாம் நமது தாய்மொழியுடன்தான் பிறந்து வளர்ந்தோம். எமக்கு முதலில் மொழியைக் கற்பித்தது எமது தாய். மொழியை முன்நிலைப்படுத்தியே நாம் அனைத்தையும் பெற்றோம். எனவே எமது மொழி, தாயைப்போலவே மிகவும் நெருக்கமானது; முக்கியமானது.

மொழியை கௌரவிப்பதன் மூலம் அவர் கௌரவிக்கப்படுகின்றார். ஒருவரின் மொழியை மற்றவர் தாழ்த்துவதால் அவர் தாழ்த்தப்படுகின்றார். அனைத்தையும் எமக்கு மொழியே கற்றுத் தருகின்றது. எமது மனிதத்துவத்தை நாம் மொழியின் மூலமே வெளிப்படுத்துகின்றோம். எமது மனிதத்துவத்தின் பொதுத் தன்மையைப் பேண, மற்றையவரின் மொழியை நாம் கௌரவிக்க வேண்டும். அப்போதுதான் மனித மாண்பைப் பிரகடனப்படுத்த முடியும்.

வேற்று மொழியைப் பேசுவதன் மூலமும் பயன்படுத்துவதன் மூலமும் பெறும் மகிழ்ச்சி, மற்றையவரின் உரிமையாகும். இத்தகையதொரு சூழலிலேயே சமாதானத்தையும் சுபீட்சத்தையும் அனைவரும் பெறமுடியும்.

எமது நாடு, ஒரே நாடு; நாம் ஒரு தாய் மக்கள்; ஒரே குடையின் கீழ் வாழவேண்டும் என்பது வாய் வழியாக கூறப்படும் விடயமே தவிர, மொழி தொடர்பாக எதுவித செயற்பாடுகளோ நடைமுறைகளோ கவனத்தில் எடுத்தாளப்படவில்லை. சட்ட ரீதியாகவும் எதுவும் நடைமுறையில் இல்லை.

நம் நாட்டில் வாழும் இரு மொழி இனத்தவர்களுக்கும் தம்முடன் ஒட்டிப் பிறந்த தாய் மொழியைத் தவிர, ஏனைய மொழியில் சரளமாக உரையாட முடிவதில்லை. இதனால், நமது தேச மக்கள் மொழி தொடர்பான பிரச்சினைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

மொழியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பாகுபாடு காட்டல் காரணமாக, நாம் கடந்த 30 ஆண்டுகள் யுத்தத்தை எதிர்கொண்டோம்.

யுத்தம் இன்று நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால், எந்தத் தரப்பும் வெற்றி கொள்ளவில்லை. மொழிகளைக் கௌரவிப்பதால் மாத்திரமே இரு தரப்பினரும் வெற்றி பெற முடியும். இதனூடாகத்தான் நிரந்தர சமாதானத்தையும் சுபீட்சத்தையும் அனைவரும் பெற முடியும்.

சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாயிருத்தல் வேண்டுமென்ற சட்டம் 1944.05.04ஆம் திகதி சட்டசபையில் அங்கிகரிக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு நமக்கு ஒரளவு சுதந்திரம் கிடைத்தது. அப்போது நமது நாட்டின் அரச கரும மொழி ஆங்கிலமாகத் திகழ்ந்தது.

சுதந்திரத்தின் பின்னர் ஆங்கிலத்திலிருந்து விடுபட்டு இலங்கையின் அரச கரும மொழிகளாக சிங்களமும் தமிழும் அமலாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை.

வரையறுக்கப்பட்ட சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நடந்த போராட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களாகிய நாம் அனைவரும்தான் பங்கு பற்றியிருந்தோம். ஆயினும் மொழியுரிமை என்பது சிறுபான்மை இன மக்களுக்கு எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது.

சுதந்திரத்துக்குப் பின்னர் ஆங்கிலத்திலிருந்த சட்டங்கள், சிங்களத்திற்கு மாற்றப்பட்டதுடன் ஆங்கிலமொழி இணைப்பு மொழியாகப் பேணப்பட்டது. சட்டம், நிர்வாகம், நீதி, கல்வி என்பன ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு மாத்திரமே மொழிபெயர்க்கப்பட்டதுடன் தமிழ் மொழிக்குரிய மொழிபெயர்ப்புகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை.

இதனால், சிறுபான்மை மக்களுக்கு உளரீதியான தாக்கம் ஏற்பட்டமையே நாளடைவில் இரு மொழியினரையும் பிளவுபடுத்தியது. இலங்கையில் நான்கில் மூன்று சதவீதமான பகுதிகளில் அமைந்துள்ள அரச திணைக்களங்களின் நாளாந்த செயற்பாடுகள், நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே நடைபெறுகின்றன.

தலைமை அலுவலகங்களில் இருந்து வரும் சுற்று நிருபங்கள், கடிதங்கள், உத்தரவுகள் என்பன சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மாற்றம் செய்யப்படாமல் சிங்களத்திலேயே தமிழ் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதனால் அலுவலகங்களில் அரச அதிகாரிகளுக்கும் மக்களுக்குமிடையில் பாரியளவிலான அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

தமிழ் நீதிமன்ற மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் வடக்கு, கிழக்கில் அமைகின்ற ஏற்பாடுகள் வெறும் சுற்றுநிருபங்கள் மூலமே நடைமுறையில் இருந்து வந்துள்ளன. மிக நீண்ட போராட்டத்தின் பின்பே தமிழ் மொழி அரச கரும மொழி அந்தஸ்தைப் பெற்றது. அந்த அந்தஸ்தைக் கூட சரியான முறையிலே பிரயோகிப்பதில் தடைகள் இருக்கின்றன.

விழி போல எண்ணி, தமிழ் காப்போம்; அதேவேளை முறையாக பன்மொழி பயிலுவோம்.


---

இலங்கை கல்வி வரலாற்றின்

# அறிவுக் களஞ்சியம்

## மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரன் குறித்த ஒரு பார்வை


சி. அருள்நேசன்
கல்வியியல் பட்டதாரி

கல்வி உலகில் பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரன் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். பல்லாயிரக்கானக்கான மாணவர்களுக்கு ஐயம்திரிபற அறிவுபுகட்டி அத்தனை பேரினதும் அன்பையும் மதிப்பையும் பெற்ற பேராசான் இவர். இலங்கையின் கல்வி சமூகம் இவருக்கென வழங்கிய சிம்மாசனம் இன்று வெறுமையாகிக் கிடக்கின்றது. பெற்ற கல்வியைத் தனது சமூக உயர்வில் அள்ளி இறைத்த எளிமையான மனிதர். தன்னை நாடி வருபவர்களை புன்னகையுடன் ஏற்று, சகஜமாக பேசும் பக்குவம் கொண்டவர். தனது உரைகளில், எழுத்துகளில் பன்முக கலாசார வளர்ச்சி பற்றியும் சமூகத்தின் எழுச்சி பற்றியும் தொடர்ச்சியாக பேசிய ஆசான் அதனை வழிநடத்த இளைய தலைமுறையினர் முன்வர வேண்டும் எனவும் கூறும் பொது மனிதர் இவர்.

கல்விச் சிந்தனையாளர், எழுத்தாளர், பதிப்பாசிரியர், சமூக பற்றாளர், மொழிப்புலமையாளர், சிறந்த நாவன்மையாளர், பன்னூல் படைப்பாளர், நேர்படப் பேசும் நெறியாளர், சிறந்த மனித பண்பாளர் என்ற பல நடிபங்கினை கொண்ட இவர், கல்விச் சமூகத்தில் தனக்கான இடத்தினை கொண்டு, கோட்பாடுகளை அறிந்து, அவற்றிலிருந்து வெளியே வந்து, நடைமுறை உலகோடு பொருந்தி, சமூகபுலத்துடன் கல்வியை உணர்த்தி நின்ற பேராசான்.

பல்கலைக்கழக காலத்தில் கற்றல், வாசிப்பு, எழுத்து, இலக்கியம், நாடகம் எனப் பலத்துறை ஆர்வலராக விளங்கிய பேராசிரியர், தனக்கான இடத்தைத் தக்க வைத்துக்கொள்ள சிறந்த முயற்சியும் அர்ப்பணிப்பும் கொண்டவராக செயற்பட்டுள்ளார். தனது வாழ்நாளில் இந்திய வம்சாவளி தமிழர்களின் முக்கியத்துவம், பிரச்சினைகள் பற்றிக் கூறும் ‘இலங்கை இந்திய வரலாறு’ என்ற முதல் நூலை வெளியிட்டமை முக்கியமானதாகும்.

> “ கல்விக்கொள்கை, பாடத்திட்டம், மொழிப்பெயர்ப்பு, உயர்கல்வி, புத்தாக்கம், சர்வதேச தரத்திலான கல்விப்புலத்தினை உள்நாட்டில் ஏற்படுத்த உழைத்தார்

சிறந்த கல்வியியலாளரான இவர் நாட்டின் கல்விக்கொள்கை, பாடத்திட்டம், மொழிப்பெயர்ப்பு, உயர்கல்வி, பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு, புத்தாக்கம், சர்வதேச தரத்திலான கல்விப்புலத்தினை உள்நாட்டில் ஏற்படுத்தல் போன்ற இன்னும் பல விடயங்களை தன்னை முழுமையான அர்ப்பணித்த ஓர் ஆசானாவார். இவை தொடர்பான ஆய்வு கட்டுரைகள், நூல்கள், பத்திரிகை கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதி வந்துள்ளார்.

> “ கல்விச் சிந்தனையாளர், எழுத்தாளர், பதிப்பாசிரியர், சமூக பற்றாளர், மொழிப்புலமையாளர், சிறந்த நாவன்மையாளர், நேர்படப் பேசும் நெறியாளர் என்ற பல நடிபங்கினை கொண்டவர்

ஆசிரியர் பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பேராசிரியர் புதிய நூற்றாண்டுக்கான ஆசிரியர் கல்வி என்ற தனது கட்டுரையில் ‘புதிய நூற்றாண்டுக்கான புதிய கல்விச் சூழமைவானது, புதிய விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக அறிவியல் அறிவையும் உயர்மட்டத் திறன்களை பலவற்றையும் வலியுறுத்துகின்றது. இவற்றோடு நற்பண்பு வளர்ச்சி, கற்பதற்கு கற்றல், வாழ்நாள் முழுவதும் கற்கும் பழக்கங்களை ஏற்படுத்தல் என்பனவும் அடங்கும். இவையாவும் ஆசிரியர் கல்வியிலும் பயிற்சியிலும் பிரதான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஆசிரியர்கள் தாம் பாட நிபுணர்கள் என்ற எண்ணத்தைக் கைவிட்டு, மாணவர்களோடு இணைந்து கற்றுக்கொள்ள வேண்டும்’ என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வித்துறையில் அவர் பார்வை படாத இடமே இல்லை. வகுப்பறைக் கல்வியிலிருந்து பாடசாலைக்கல்வி, மலையகக்கல்வி, பல்கலைக்கழகக்கல்வி, இளையோருக்கான கல்வி, புதிய நூற்றாண்டுக்கான கல்வி, வாழ்க்கைகான கல்வி, வாழ்நாள் நீடித்த கல்வி, நவீன கல்விச் செல்நெறிகள் வரை அவர் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதி குவித்துள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் எழுதியுள்ள முப்பதுக்கும் அதிகமான நூல் படைப்புகள், எழக்கூடிய அனைத்து கேள்விக்கும் விடை கிடைக்கும் அறிவு களஞ்சியங்களாக உலாவருகின்றன.

குறிப்பாக, பேராசிரியரின் கல்விசார்ந்த படைப்புகளில் கல்வியியல் கட்டுரைகள், இலங்கையின் கல்வி வளர்ச்சி, கல்வியும் மனித மேம்பாடும், கல்வி ஒரு பன்முக நோக்கு, கல்வித் திட்டமிடல், புதிய கல்வித்தடங்கள், முகாமைத்துவக் கொள்கைகள் ஓர் அறிமுகம், கல்வியும் மனிதவள வளர்ச்சியும், உயர்கல்வியில் புதிய செல்நெறிகள் என முப்பதுக்கும் அதிகமான கல்விசார்ந்த நூல்கள் மற்றும் பத்துக்கும் மேற்பட்ட மொழிப்பெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

சமூக வாழ்விலும் சரி, தனிமனித வாழ்விலும் சரி கல்வி உட்புகாத, நுழையாத துறையே கிடையாது. கல்வியியல் அறிவுத் தொகுதியில் ஏற்படும் மாற்றங்கள் நாளும் கணமும் நம் புரிதலுக்குள் எளிதில் அடங்காத விசையில் வேகம் கொண்டு வியாபித்து விரியும் சூழலில் கல்வித் புலத்தில் இந்த மாற்றங்களை எதிர்கொள்ள தயராக இருக்கக்கூடிய தலைமுறையினரை உருவாக்க எத்தனிக்க வேண்டும் என்பதனை தனது எழுத்திலும் உரையிலும் தொடர்ச்சியாக வலியுறுத்தியவராவார்.

> “ ஆசிரியர்கள் தாம் பாட நிபுணர்கள் என்ற எண்ணத்தைக் கைவிட்டு, மாணவர்களோடு இணைந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்

கல்விச்சமூகம் எழுச்சி பெற வேண்டும் என்ற சிந்தனையை கொண்டிருந்த இவர், பல ஆங்கில கட்டுரைகளை மொழிபெயர்த்து அச்செல்நெறியை பின்பற்ற எத்தனிக்க வேண்டும் என்ற பரந்த மனதினை கொண்டு செயற்பட்டார். கல்வித்துறை சார்ந்த விடயங்களில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்ட பேராசிரியர், மலையக மக்களின் வாழ்வியல் செயற்பாடுகளையும் அவர்களின் வரலாறையும் கூறுவதில் பின்வாங்கவில்லை. ஒரு சமூகம் விருத்தியடைவது கல்விசார்ந்த வளர்ச்சியினாலே என்ற விடயத்தை அடிப்படையாகக் கொண்டு, மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பல பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தார்.

கல்வியுலகில் தனக்கான தனியிடத்தினை கொண்டுள்ள பேராசிரியர், தனது வாழ்நாளினை கல்விக்காகவே அர்ப்பணித்து, ஒட்டுமொத்த கல்விச்சமூகமும் கல்வியில் உயர்ச்சி பெற பங்குதாரராக செயற்பட்டவர் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

அறிவுக் களஞ்சியமான பேராசான், விதைச்சென்ற அறிவு விதைகள் விருட்சமாகி, சமூத்தின் வளர்ச்சிக்கு பயனளிக்கும் என்பது திண்ணம்.

## சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.சு.கதிர்காமத்தம்பி

# ஞாபகார்த்த அரங்கு அங்குரார்ப்பணம்





சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.சு. கதிர்காமத்தம்பியைக் கௌரவிக்கும் முகமாக, 'ஊடகவியலாளர் வீ.சு. கதிர்காமத்தம்பி ஞாபகார்த்த அரங்கு' அங்குரார்ப்பண நிகழ்வு, அவரது பிறந்த தினமான செவ்வாய்க்கிழமை (05) கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தில் தலைவர் எல். தேவஅதிரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி. சரவணபவன், வீ.சு. கதிர்காமத்தம்பியின் குடும்பத்தினர், மாநகர சபை உறுப்பினர்களான சிவம் பாக்கியநாதன், சீ. ஜெயந்திரகுமார், வி. பூபாளராஜா, 'மகுடம்' ஆசிரியர் மைக்கல் கொலின் உட்பட ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, ஊடகவியலாளர் வீ.சு கதிர்காமத்தம்பியின் ஞாபகார்த்த அரங்கின் பெயர்ப்பலகையை அன்னாரின் பாரியார் திறந்து வைத்து, அரங்கை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

மட்டக்களப்பு நகர சபை மேயர் தி. சரவணபவன், வீ. சு கதிர்காமத்தம்பியுடன் இணைந்து 'விடிவானம்' பத்திரிகையில் பணியாற்றியவரும் 'மகுடம்' சஞ்சிகையின் ஆசிரியருமான மைக்கல் கொலின் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

'வீரகேசரி' பத்திரிகையின் பிராந்திய செய்தியாளராகத் தனது பத்திரிகைப் பணியை ஆரம்பித்த வீ.சு .கதிர்காமத்தம்பி, 'கொண்டல்', 'விடிவானம்' பத்திரிகைகளை ஆரம்பித்து நடத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.






# வரிப்பத்தான்சேனையில் அகமகிழ் விழா







வரிப்பத்தான்சேனை கிராமத்தில் உள்ள பாடசாலைகளில் முதல் தடவையாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஆறு மாணவர்கள் சித்தியடைந்து, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர். வரிப்பத்தான்சேனை லீடர் ஜூனியர் பாடசாலையிலே இச்சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

பாடசாலையின் தசாப்த தடம்பதித்த சாதனையை முன்னிட்டு, அகமகிழ் விழா ஏற்பாடு செய்யப்பட்டு, குறித்த மாணவர்கள், ஆசிரியர்கள், சேவையாளர்கள் பாராட்டப்பட்டனர்.

பாடசாலை அதிபர் யு.கே. நிஹால் தலைமையில் நடைபெற்ற அகமகிழ் விழாவுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹூதுல் நஜீம் கலந்து சிறப்பித்தார்.

இதற்கு முன்னர், 2014இல் அல்-அஸ்ஹர் பாடசாலையில் ஐந்து மாணவர்களும் 2019 இல் லீடர் ஜூனியர் பாடசாலையில் ஐந்து மாணவர்களும் சித்திபெற்றிருந்தனர். இந்நிலையில், இம்முறை ஆறு மாணவர்கள் சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர். இதுவே கிராம வரலாற்றில் வரலாற்றுச் சாதனையாகும்.

விழாவில், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், இறக்காமம் பிரதேச சபை தவிசாளர், முன்னாள் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

(படங்களும் தகவலும்: காரைதீவு நிருபர் சகா)

# கவிதை நூல் வெளியீடும் பெண் ஆளுமைகள் கௌரவிப்பும்



ஏறாவூர், தமிழ்ச்சாரல் கலை இலக்கிய வட்டத்தின், 'தமிழ்ச்சாரல்' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும், பெண் ஆளுமைகளைக் கௌரவிக்கும் நிகழ்வும் மார்ச் மாதம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஏறாவூர் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

'தமிழ்ச்சாரல்' கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் எம்.எச். ஜிப்ரியா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ். நளீம் கலந்து சிறப்பித்தார்.



இந்நிகழ்வில், 11 பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய 'தமிழ்ச்சாரல்' என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் ஏறாவூரில் உள்ள பல்துறை சார்ந்த பெண் ஆளுமைகள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

(படங்களும் தகவலும்: எம்.எஸ்.எம். ஸாகிர்)

# மழலையர் கலை விழா

மார்ச் மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் நடைபெற்ற மழலையர் கலை விழாவின் காட்சிகள் இவை.

(படங்களும் தகவலும்: சபா தனுஜன்)





















# இலக்கியங்கள், படைப்பாளர்கள், தடங்கள்

## பேராசிரியர் செ. யோகராசாவின் நூல் வெளியீடு 10ஆம் திகதி மு.ப 9.30 மணிக்கு நடைபெற உள்ளது

பேராசிரியர் செ. யோகராசாவின் 'ஈழத்து நவீன இலக்கியங்கள் படைப்பாளர்கள் தடங்கள்' நூல் வெளியீடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (10) மு.ப 9.30 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் பேராசிரியர் சி. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற உள்ளது.

நூலுக்கான முதல் பிரதி சைவப்புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி பெற்றுக்கொள்ளவுள்ளதுடன், வெளியீட்டு உரையை த. மேகராசா, நூல் மதிப்பிட்டுரையை எழுத்தாளர் எம். அப்துல் றஸாக் நிகழ்த்த உள்ளனர்.

வ. திவாகரன்

# கிளிநொச்சியில் குமரித் தமிழ் பணி மன்றத்தின் பெருவிழா

இலங்கை குமரித் தமிழ் பணி மன்றம் நடத்தும் முற்போக்கு சீர்திருத்த சிந்தனையாளர் சமூகப் பணியாளர் அமரர் நா. வை. குகராசா (மணிவண்ணன்) நினைவு அரங்கு எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை, ஏ 9 வீதியில் அமைந்துள்ள கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் கவிஞரும் எழுத்தாளருமான வண. முனை. து. சி. யோசுவா அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பண்பாட்டலுவல்கள் அதிகாரி பொன். இராசதுரை, கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமலராசன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையின் திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில், வாழும் போது வாழ்த்துதல், பல்கலைக்கழக புகு மாணவர்களை கௌரவித்தல், நூல் வெளியீட்டு விழா, குமரித் தமிழ் மன்ற அறக்கட்டளை அங்குரார்ப்பணம் எனப் பல நிகழ்வுகள் நடைபெறும்.

இதில், கண்டியிலுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், சமூகத் தொண்டர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். சமூகத் தொண்டர் வே. சிதம்பரநாதன், கலாபூசணம், இரா. அ. இராமன், சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், 'வளவை வளவன்' மா. செல்லத் தம்பி, 'கலாபூசணம்' இ. நடராசா, 'வள்ளுவதாசன்' நா. சிவராசா, 'அண்ணாவியார்' அ. அமிர்தநாயகம், திருவேணிசங்கமம், சோ. செல்வராணி, கை மணியம், நா. முருகானந்தம், பார்வதி நல்லதம்பி, கவிதா சண்முகநாதன், ச.மு. அருளம்பலம் இன்னும் பல்துறை சார்ந்தவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நினைவுப் பேருரையை ஏ. அருந்தவசீலன், இ. மீனலோகினி, க. ஜெயக்குமார் ஆகியோரும் சிறப்புரையை பூநகரி மேனாள் பள்ளி முதல்வர் சைவப்புலவர் கு. சண்முகலிங்கமும் கௌரவிப்பை இலங்கை குமரி தமிழ் மன்றத்தின் நிறுவுநர் கலாபூசணம் நா. வை. குமரிவேந்தன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

இக்பால் அலி

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 09 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.